MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

R-11-117
1248
2592
I
XX. A.
V-4
V-382

ஹரிஸமய திவாகரம்.

முதல் தொகுதி.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

பத்திராதிபன்— பண்டித, அரங்கராமாநுஜன்

மதுரை
மனோன்மணிவிலாச முத்திராசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

ருதிரோத்காரி—ரக்தாக்ஷி

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

ஸ்ரீ:

ஹரிஸமய திவாகர முதல் தொகுதியின்

உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அக்ராஸநருக்குக்கூறிய நல்வரவு-	ஸ்ரீமாந். திரு கி. இராமாநுஜ ஐயங்கார் ஸ்வாமி	289
அவதார ரஹஸ்யம்-	ஸ்ரீ. உப. வே ஸாது ராமாநுஜா சார்ய ஸ்வாமி	27, 43, 56,
அநுதாபக்குறிப்பு-		56
அந்திமஸ்மிருதிவேண்டா-	ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி திருமாலிருஞ்சோலை ஜீயர் ஸ்வாமி	265
அஷ்டாங்கயோகம்-		50
ஆநகதுந்துபி-		79
ஆழ்வார்-		169
ஈசுவரபக்ஷபாதமில்லாமை-	ஸ்ரீ. உப. வே. தேசிகவரதாசார்ய ஸ்வாமி	18
ஈசுவர கர்த்ருத்வம்-		217
உடலெடுத்ததின் பயன்-		54, 76
உபநிஷத் விவரணம்-	ஸ்ரீ. உப. வே. எம்பார் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி	121, 270
என்னீர்மை என்னும் திருவாய்மொழியின் பட்டர் நிர்வாஹம்-	ஸ்ரீமாந். திரு. நா. அப்பனையங்கார் ஸ்வாமி	185
ஒரு ஸம்சயம்-	ஸ்ரீ. உப. ப்ர. அண்ணங்கராசார்ய ஸ்வாமி	243
க்ருஷ்ணதேவராயர்-	ஸ்ரீமாந். திரு. நா. அப்பனையங்கார் ஸ்வாமி	246
கைப்பொருள் கொடுத்துங் கற்கை நன்று-		36
கோவர்த்தனமெடுத்த விருத்தாந்தம்-		221
சந்தாதார்களுக்கு அறிவிப்பு-		303
ஸ்ரீ சரண்யாபிமத விஷ்ணுசித்த ராமாநுஜ ஸபையின் 12-ம் வருஷோத்ஸவம்-		247
சரணாகதிப் பதிகம்-	ஸ்ரீமத். வி. தி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி	251

ஸம்பந்தஜ்ஞாநம்-	ஸ்ரீ. உப. வே. ஸாது ராமாநுஜாசார்ய ஸ்வாமி	67
செல்வம்-		225
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 14-வது வார்ஷிகஸங்கம்-		290
தர்மம்-	ஸ்ரீமாந். திரு நா. அப்பனையங்கார் ஸ்வாமி	97, 156
திருக்குறட்பொதுமை-		203
திருமோகூர் மஹாஸம்ப்ரோக்ஷணம்-		102
திண்டாமை-		?3, 149, 201
நன்றி மறவாமை-		174
பகவத்விஷய காலக்ஷேப சாத்துமுறை-		184
பஞ்சீகரணோபாதாந த்ரவ்யம்-		53
பாகவதாபசாரம்-		208
பிழையும் திருத்தமும்-		104, 307
மங்கள வாழ்த்து-	ஸ்ரீ. உப. வே. திரு. நாராயணையங்கார் ஸ்வாமி	9
முகவுரை-		1
ஸ்ரீ ராமாநுஜஸித்தாந்த ப்ரகாசிகை	ஸ்ரீ. உப. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி	57, 81, 105, 137, 161, 189, 209, 233, 257, 281
விஜ்ஞாபநம்-		4
விசிஷ்டாத்வைதம்-	ஸ்ரீ. உப. வே. தேசிகவரதாசார்ய ஸ்வாமி	33, 73, 169
வீதஹவ்யர்-		145
வேதாந்த தத்வ விளக்க வினுவிடை-	ஸ்ரீமாந். முதலியாண்டான் தாஸர்	48, 63, 90, 182, 249
வைநதேய விருத்தாந்தம்-		275
ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் அநாதி-	ஸ்ரீ. உப. வே. வேங்கடாசார்ய ஸ்வாமி	113, 129, 177
ஸ்ரீ வைஷ்ணவ தர்ம அபிவிர்த்தி ஸங்கம்-		253

ஹரிஸமய திவாகர முதல் தொகுதியில் வெளிவந்த புஸ்தகம்.:— கூடல் மான்மியம் 2, 3, 4, 5, 7, 8, 9, 10, 11 பகுதிகள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி க. ருத்ரோத்காரி ௵ தை மீ பகுதி க.

Vol. I. January & February 1924. No. 1.

முகவுரை.

"ஒருவயிற்றும் பிறவாது பிறந்தருளி யுலகொடுக்குந்
திருவயிற்ற தொருகுழவி திருநாமம் பரவுதுமே"

ஸ்ரீய:பதியான ஸர்வேசுவரன் மாந்தர்கள் உண்மையறிந்து உஜ்ஜீவிக்கும்பொருட்டு வேதங்களை நான்முகன்வாயிலாகவும், உபப்பிருமணம் [விளங்கச்செய்வது] முதலிய தருமசாஸ்திரங்களை மநு முதலானோர்வாயிலாகவும், வெளியிட்டு வேதஸாரமான திருவஷ்டாக்ஷர மந்திரத்தைத் தானே நரநாராயணரூபியாய் அவதரித்து வெளியிட்டான். இவற்றால், உலகினர் பலரும் உணர்ந்து உய்வடையாமையைக்கண்ட ஸர்வேசுவரன் நாம், நேரிற்சென்று சாஸ்திரங்களிற் கூறியபடி அனுஷ்டித்துக் காட்டுவோமெனக் கருதி இராம கிருஷ்ணாதியவதாரங்களைச் செய்தான். அவ்வவதாரங்களில், மனுஷ்யனென உறவுபாராட்டினோர் பலராய் ஜகத்காரணமென உணர்ந்தார் சிலராய் ஒழிய; இஃதென்னே? நாம் உலகினரை உய்விக்கப்பல உபாயங்கள் செய்தும் பயனற்றனவாய் ஒழிந்தனவே

*

என ஆராய்ந்து மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வாராசார்யா களை அவதரிக்கச்செய்து அவர்களால் யாவரும் கற்றற்குரிய தமிழ் வேதங்களையும் அவற்றிற்கு வியாக்யானங்களையும் வெளியிட்டான். அங்ஙனம் வெளியிட்ட தமிழ்வேதங்களின் வியாக்யானங்கள் மணிப்பிரவாள நடையாயும் வடமொழி தென்மொழிகளில் வல்ல பண்டிதர்களால் பொருளாராயத் தக்கவைகளாயு மிருக்கின்றமை யால் அவை ஆசார்யமூலமாய்க்கேட்டே தெரிந்துகொள்ளத் தக் கனவாயிருக்கின்றன.

இந்தக்காலத்தில் குடும்பப்பாதுகாவல் முதலிய இல்வாழ்வு இனிதாய் நடந்தேறுவதற்கு ஆங்கிலநூலுணர்ச்சியே முக்கிய சாதனமாயிருப்பதால் பலரும் அந்நூலைப்பயின்று தக்க உத்தி யோகப் பதவிகளை வகித்துவருகின்றனர். இவர்கள் இத்தமிழ்வேத வியாக்கியான முதலியவைகளை அறிந்துகொள்வதற்கு ஒழிவுகால மில்லாதிருக்கின்றனர். மேலும் ஆங்கில உத்தியோகங்களை வகித்த கனவான்களும் அவர்களைத் துணையாகப் பற்றினவர்களும் பெரி யோர் வாயிலாகத் தத்வசாஸ்திர முதலியவைகளை அறிந்து வரு கின்றாராயினும் அங்ஙனமறிதல் பலருக்கும் இயலாதிருக்கின்றதி னால் இவர்களனைவரும் ஒழிவு நேரங்களில் தமிழ்வேத வியாக்யான முதலிய வைதிக சமயக் கொள்கைகளையெல்லாம் எளிதாயறிந்து கொள்ளுதற்குச் சாதனமாக "ஹரிஸமயதிவாகரம்" என்னும் பெயர்புனைந்து இப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.

முற்காலத்தைப்போல் குருகுலவாஸம் செய்து சாஸ்திர முடிவுகளைத் தெரிந்துகொள்வதற்கு இயலாத இக்காலத்தில் இத் தகைய பத்திரிகைகளே பெண்கள் பேதையர் முதலிய பலருக்கும் பேருபகாரம் செய்து வருகின்றன.

இப் பத்திரிகைக்குப் பத்திராதிபராயிருந்து நடத்துபவர் இரு மொழிப் புலமையும் சமயோசித அறிவும், சாஸ்திர பரிபாஷை யின் முறையும், உய்த்துணர்வும் சொல்லாற்றலும், விஷயங்களைச் செவ்வனே எழுதும் திறனுமுடையவராயிருத்தல் வேண்டும்.

இவற்றில் ஒரு சிறிதும் யோக்கியதையில்லாத அடியேன் இக் கார்யத்தை மேற்கொண்டது யாவராலும் எள்ளற்பாலதேயாம். சில பெரியோர்கள் இக்காரயத்தை நீ வகித்து நடத்தி வருவாயாக; எனப் பொருளல்லாதவென்னைப் பொருளாக்கி நியமித்தாராதலான் அவர்கள் கட்டளையைச் சிரசாக வகித்துச்சில வித்வான்களின் உறுதுணையுங்கொண்டு இதை மேற்கொள்ளலானேன். புலவர்பெருமக்களாய் விளங்குகின்றவர்கள் இச்கார்யம் மேன்மேலும் நன்கு நடைபெற்று விளங்குமாறு விஷயதானங்கள் செய்து வருவார்களாக.

இப் பத்திரிகையில் மத தூஷணங்களும் தெய்வ நிந்தைகளும் வெறுக்கத்தக்க விஷயங்களும் சாஸ்திர விரோதமானவைகளும் வீண் வேடிக்கை உண்டுபண்ணத்தக்கவைகளும் எழுதப்பெறுவாம். விஷயதானம் செய்யுமவர்கள் மேற்குறிப்பட்டவற்றிற் கிணங்கச் செய்யவேண்டும். அவற்றிற்கு விரோதமாக இருக்குமாகில் அவர்கள் விஷயதானங்களை வாளா விடப்படும்.

தக்க வித்வான்களால் சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸ, புராண விஷயங்களும், ஆழ்வார், ஆசார்யர்களருளிய ப்ரபந்தரஹஸ்ய வ்யாக்யானங்களின் ஆழ் பொருள்களும், ஆசார்யர்களின் காலவாராய்ச்சியின் சீர்திருத்தங்களும், நுண்ணிய சில ஆராய்ச்சிகளும், ஸ்ரீராமாயண, பாரத, பாகவத, விஷ்ணுபுராண, பகவத்கீதை, முதலியவற்றிற்கண்ட நீதிகளும் உபாக்யானங்களும், தர்மசாஸ்திரங்களும் அச்சிடப்பெறாத சில அரிய நூல்களும், அச்சிடப்பெற்ற நூல்களிற்கண்ட அச்சுப்பிழையின் சீர்திருத்தங்களும், அறம், பொருள் இன்பம், வீடு, என்னும் நால்வகை உறுதிப்பொருள்களும், சம்பிரதாயத்தைப்பற்றிய தமிழ் நூல்களும், வருணாச்ரம தர்மமுறைகளும், வ்யாக்யானங்களிற்கண்ட தமிழ் பிரமாண நூல் விளக்கமும் வைஷ்ணவாசாரமும், ஆசார்யசிஷ்ய லக்ஷணங்களும், தத்வ இயல்புகளும், அகப்பொருள் விரவி வரப்பட்ட பாடல்கட்குப் பூர்வாசார்யர்களும் தமிழறிஞர்களுங் கொண்ட பொருள்களின் ஒற்றுமை வேற்றுமை நயங்களும், கம்பராமாயண, வில்லிபாரதங்களிற் கண்ட அரிய விஷயங்களும், பூர்வாசார்யர்கள் இன்னவழியாய் சம்பிரதாயத்தை விர்த்திசெய்து வந்தார்களென்பதும், விதிவாக்கியங்

களையும், பிரஸ்துத ப்ரசம்ஸாபரமான வாக்கியங்களையும், பகுத்தறியுமுறையும், சாஸ்திரங்களின் அர்த்த நிர்ணயம் செய்யும் வகையும், நன்முறையைக் கைக்கொள்ளும் உபாயங்களும், பொது விஷயங்களும் இதில் எழுதப்பெறும்.

இப்பத்திரிகை காலநிலைமைக் கேற்றபடி இன்னும் இன்ன சீர்திருத்தத்துடன் நடத்தவேண்டுமென அறிஞர்கள் போதிப்பார்களாகில் அவ்வாறே சீர்திருத்தி நடத்தப்படும்.

சம்பிரதாயத்தைப் பற்றிய அரிய எட்டுப் பிரதி நூல்கள் வைத்திருப்பவர்கள் கொடுத்துபகரிப்பார்களாகில் அவர் நன்றி எழுமையும் மறக்கற்பாற்றன்று.

இப்பத்திரிகை குறைவின்றி நடைபெறுமாறு ஆஸ்திகபுத்தியும் தர்ம சிந்தனையுமுள்ளவர்களனைவரும் இப் பத்திரிகைக்குச் சந்தாதார்களாகச் சேர்ந்து உபகரித்தருளவேண்டுகிறேன்.

இங்ஙனம்,
பத்திராதிபர்.

ஸ்ரீ:

விஜ்ஞாபநம்.

"பரவைவெண்டிரைவடகடற்படுநுகத்துளையட்
டிரைசெய்தென்கடலிட்டதோர்நோன்கழிசிவணி
யரசவத்துளையகவயிற்செறிந்தெனவரிதாற்
பெரியயோனிகள்பிழைத்திவண்மானிடம்பெறலே"

என்றபடி, மானிடப் பிறப்படைதல் தென்கடலில் இடப்பட்ட ஒரு நுகத்தடித்துளையுள் வடகடலில் இடப்பட்ட ஒரு கோல் சென்று நுழைதல் எவ்வளவு அரிதோ அவ்வளவு அரிதென்று சொல்லப்பட்டுளது.

இவ்வளவு அருமையான மானிட சரீரத்தைப்பெற்றவர்கள் மெய்யுணர்வடைந்து மோக்ஷமாகிய புருஷார்த்தத்தைப் பெற்றாலன்றி அச்சரீரத்தாலாகிய பயனை யடைந்தவராகார். இதனான் மக்களாய்ப் பிறந்தாரனைவரும் உண்மையறிவைப் பெறவேண்டிய முயற்சிகளைச் செய்தல், அவர்களது கடமையென்பது பெறப்படும்.

இவ்வுண்மையறிவை யடைதற்குச் சாதனமாயிருப்பன அறிவு நூல்களேயாம். இந்நூலறிவு பெற்றாலன்றி ஆத்மா, பரமாத்மா, புருஷார்த்தம், முதலிய லக்ஷணங்களையும், நன்மை தீமைகளின கூறுபாட்டையும், புண்யபாப இயல்புகளையும், உள்ளபடி அறிய முடியாவாதலான் சாஸ்திரங்கள் மக்களாய்ப் பிறந்தோரனைவரும் அவ்வுண்மை நூலறிவைப் பெறவேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகின்றன. இந்நூலறிவின் பெருமையறிந்த அக்காலத்துச் சேர சோழபாண்டிய மன்னர்கள் பல கல்விச்சங்கங்கள் ஸ்தாபித்து எல்லோரையும் அறிவின் மிக்கோராய் விளங்கச்செய்தனர்.

முற்காலவியல்பு.

மணிமேகலையென்பவள் வஞ்சிமாநகரத்திற்சென்றுவேதவாதி, அளவைவாதி, வைணவவாதி, பிரமவாதி, வைசேடிகவாதி, ஆசீவகவாதி, சாங்கியவாதி, நிகண்டவாதி முதலிய சமயவாதிகளை அடுத்து அவர்களுடைய சமயக் கொள்கைகளையெல்லாம் உணர்ந்தனள் என ஐம்பெரும் காப்பியத்துள் ஒன்றான மணிமேகலையிற் கூறப்பட்டுளது. சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் என்பவன் ஒருபெரியகல்விச்சங்கம் ஸ்தாபித்து எவ்ரெவர் எவ்வெக்கல்விகளைக் கற்க விரும்புகின்றார்களோ அவரவர் விரும்பியபடி கல்விபயிற்றுவித்துக் கல்விபயில்கின்றவர்களின குடும்பசம்ரக்ஷணமும் செய்துவந்தானென புறநானூறு என்ற சங்கநூலிற் கூறப்பட்டுள்ளது. பாண்டிய நாட்டிற் கல்விச்சங்கம்பல இருந்தனவென்பது பிரசித்தம். போஜராஜன் தன் நாட்டிலுள்ள எல்லோரையும் வற்புறுத்திக் கல்விபயிற்றுவித்து அறிவின்மிக்கோராய் விளங்கும்படி செய்வித்தா

னென்பது யாவருமறிவர். நம்பூர்வாசார்யர்களாகிய ஸ்ரீமந்நாத முனிகள், யமுனைத்துறைவர், உடையவர், பட்டர், நம்பிள்ளை முதலானோர் பிரசங்கவாயிலாகவும் உபதேச வாயிலாகவும் எல்லோரையும் ஞான ஸம்பன்னராய் விளங்கும்படி செய்தனர்.

இதனால், உண்மையறிவை அடைதற்குக் கல்விச்சங்கங்களே முக்கிய சாதனமென அக்காலத்தினர் பல சங்கங்கள் ஸ்தாபித்திருந்தனரெனவும், பூர்வாசார்யர்களும் பிரசங்கங்களாலும், உபதேசங்களாலும், எல்லோரையும் அறிவுடையராக்கி நல்வழியில் ஒழுகும்படி செய்தனரெனவும் உரைக்கப்பட்டன.

தற்கால நிலைமை.

அதுபோன்ற தரிசனவித்யா சங்கங்களில்லாததினால், ஸம்பிரதாய விஷயங்களைக்கற்கவேண்டுமென அவாமிக்க அறிவுடைய மாணவர்கள், வறுமையின் மிகுதியால் கல்விகற்கவியலாது பலர் வருந்துகின்றனர்.

கிராமாந்தரங்களிலிருக்கின்ற ஆஸ்திக புத்தியுடையவர் பலர் ஸம்ப்ரதாய விஷயங்களைக்கேட்க ஆசையுடையவர்களாயிருந்தும் ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர்களிடத்துச்சென்று. கேட்பதற்குச் சக்தியற்றவர்களாயிருக்கின்றனர்.

குடும்பபாரங்களைவிட்டு விரக்தர்களாயிருப்பவர் சிலர், ஸ்வரூப விஷயங்களை முறையாய்க் கேட்டு மனத்தில் தரித்துச்சொல்லியபடி ஒழுகுவதற்குக் கற்பிக்கும், ஓரிடமில்லாமையால் வருந்துகின்றனர்.

ஸமஸ்கிருதபாடசாலையில்சிலவித்யார்த்திகள் பலகாலும்மெய் வருந்தி, மனம்வருந்தி, தர்க்கம், வியாகரணம், வேதாந்தம், முதலிய நூல்களை ஐயந்திரிபறகற்றுத்தேறி பெரிய வித்வான்களாய் விளங்குகின்றனர். அங்ஙனமிருக்கின்றவர்களின் கல்வியின் பெரு

மையை யறிந்து அவர்களைப் போற்றுவாரின்மையால், அவரவர்கள் தங்கள் தேகசம்ரக்ஷணம் செய்து கொள்வதற்கும் அலக்ஷர்களா யிருக்கின்றனர்.

கிராமாந்தரம் முதலியவிடங்களிலிருக்கிற வறுமையுடைய சிறுவர்கள் கல்விகற்காமல் வாளாதிரிந்து கொண்டிருக்கின்றனர். அவர்களைப்பெற்றவர்களும் அவர்களைக் கல்விகற்பிக்கும் வகை தெரியாமல், கஷ்டப்படுகின்றனர். பல சமயங்களும் விருத்தி யடைந்து வருகின்றவிக்காலத்தில் நமது ஸம்ப்ரதாயம் நாளுக்கு நாள் போற்றுவாரின்மையால் மெலிவடைந்து கொண்டுவருகிறது.

வித்யாதாநம்

சாஸ்திரம் பல தானங்களின் இயல்புகளைக் கூறிப்போந்து பின் பூதாநம், அந்நதாநம், வித்யாதாநம், என்ற மூன்றும் சிறந்தன வென்றும், அவற்றுள் வித்தியாதாநமே மிகச்சிறந்ததென்றும், அவ் வித்யாதாநத்தில் மற்ற இரண்டுதாநங்களும் அடங்கியிருக்கின்றன வென்றும், இத்தாநம் ஒன்றைச்செய்பவர் மற்ற இரண்டு தாநங் களும், செய்யப்பட்டவராவாரென்றும், கூறியுள்ளது.

வித்யையைப் பெற்றவன் எல்லாத்தத்வங்களையும் பகுத் தறிந்து நிலைநின்ற புருஷார்த்தம் ஸர்வேசுவரனென்று தேறி அவனே உபாயமாகப்பற்றி அவனருளால் மோக்ஷத்தைப் பெறு கிறான். அஜ்ஞானத்தை விளைவிக்கின்ற இந்த பூலோகத்தைப் போலன்றி நிரதிசயாநந்தத்தை விளைவிக்கும் அம்மோக்ஷம் சாலச் சிறந்த நிலமாம். வித்தையைப் பெற்றவன் அவ்வித்யையாகிய சாத னத்தால் ஸர்வேசுவரனையடைந்து மோக்ஷமாகிய சாத்தியத்தைப் பெற்றானதலால் அவ்வித்யாதாநம் ஒன்றைச் செய்தவர் அந்தமில் பேரின்பத்தழிவில் வீடாகிய பூமிதானத்தையும் செய்யப்பட்டவ ராகிறார். வித்யையாகிய சாதனத்தைப்பெற்று மோக்ஷமடைந்த வன் பின் அப்பொழுதைக் கப்பொழுது ஆராவமுதாகிய ஸர்வேசு

வரனாகிய ஆநந்தத்தை அநுபவித்து நித்யானந்தமுடையவனாயிருக்கின்றான். இதனால் வித்யையாகிய சாதனத்தைப் பெற்றவன் அச்சாதனத்தால் சாத்யமாகிய ஸர்வேசுவரனாகிய ஆநந்தத்தை அநுபவிக்கின்றானாதலால் வித்யாதானம் செய்தவர் ஒப்பற்ற ஆநந்தானத்தையும் செய்யப்பட்டவராகிறார். இதனால் வித்யாதானம் மற்றெல்லாத் தானங்களிலும் மிகச்சிறந்ததென்பது தெளிவாயிற்று.

வித்யாசாலை.

இத்தானமோங்கப் பலவிடங்களிலும் தரிசன வித்யாசாலைகள் ஏற்படுத்தித் தக்க வித்வான்களைவைத்து தகுந்த யோக்யதையுடைய வித்யார்த்திகளுக்கு அன்னவஸ்திராதிகள் அளித்து, அவர்களுக்குத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களையும், ஸம்ப்ரதாய நூல்களையும், ஸம்ஸ்க்ருத காவிய நாடகாலங்கார முதலிய நூல்களையும்; பயிற்றுவித்து அவர்களைப் பண்டிதர்களாக்கிப் பலதேசங்கட்கு அனுப்பிவித்து ஸ்வரூப விஷய ப்ரசாரம் செய்யும்படி செய்விக்க வேண்டியது முக்யகடமையாயிருக்கிறது.

மேற் குறிப்பிடப்பட்ட முக்கிய காரியங்களெல்லாம் பொருளாலே நடத்தத் தக்கனவாயிருக்கின்றன. ஆகையால் தருமப்பண்டு நிதித்தலைவரும், கிராமப்போதுப்பண்டின் அதிகாரிகளும், பல வைதிக ஸபையின் நிர்வாகர்களும் தனவான்களும் அபிமானிகளும் மேற்குறிப்பிட்ட காரியங்கள் நடைபெறுவதற்குப் பொருளுதவி செய்வார்களாகில் கணக்கற்ற பொருள் நிரம்பிவிடும்.

இவ்விஷயங்களையெல்லாம் பெரியோர்கட்கு ஞாபகமுண்டாகும்படி செய்தால், அவர்களது திருவுளத்தில் ஊற்றிருந்து மேற்குறிப்பிட்ட காரியங்கள் முன்னேற்றமடைதற்குரிய உபாயங்களைச் செய்வார்களென்பது இங்ஙனம் விஜ்ஞாபிக்கலாயிற்று.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

மங்களவாழ்த்து.

நாராயணநாராயணநாராயணநமவென்
றூராயினுமிம்மந்திரமநுசந்ததமறவார்
பேராயிரமுடையானருள்பெறுவார்பிறவியிலே
வாராரினிவாராரெனமறைநாலும்விளம்பும்.

மங்களவாழ்த்தென்பது செய்யத்தொடங்கிய காரியம் நிர்விக்நமாக நடைபெற்று நன்மைபயக்கும்பொருட்டு தேவதாஸ்துதி செய்வதாம். இந்தஸ்துதிக்குக் கடவுள் வாழ்த்து, காப்பு, சரணம், வணக்கம், நாந்தி, மங்களம், என்பவை தொடக்கமான பல பெயர்களிட்டு வழங்குவதுண்டு. இவ்வாழ்த்து தம் வழிபடுகடவுளை வாழ்த்துதலும், செய்யத்தொடங்கிய காரியத்துக்கு ஏற்புடைக் கடவுளை வாழ்த்துதலும், என இரண்டு வகைப்படும். இவ்விரண்டு வகை வாழ்த்தும் ஸ்துதிரூபமான வாசிகமங்களமாம். இந்த ஸ்துதியுள் வணக்கம் சொல்லப்படுவதாயிருந்தாலும் அது பிரஸ்துத தெய்வத்துக்கு அதிசயத்தை விளைப்பிக்கும் வாசிகமாகையால், அதுவும் வாழ்த்தெனவே கொள்ளலாம். வழிபடுகடவுள் வாழ்த்தென்பது, எழுத்திலக்கணநூல் செய்யத் தொடங்கிய பவணந்தி முனிவர் எழுத்துக்கு ஏற்புடைக் கடவுளான கலைமகள் வணக்கங் கூறாது; "பூமலியசோகின் புனைநிழலமர்ந்த நான்முகற்றொழுது நன்கியம் புவனெழுத்தே" எனத் தம் ஜைனசமயக் கடவுளான அருகசரணங் கூறுதல் போல்வது. ஏற்புடைக்கடவுள் வாழ்த்தாவது, பாரதம் பாடப்புகுந்த வில்லிபுத்தூரார் தமக்கு வழிபடு கடவுளின் வேறான விநாயகக்கடவுள், முதலில் வடமொழியில் வியாசபாரதத்தை யெழுதி யுபகரித்தமையால் அப் பாரதத்திற்கு அவ்வளவில் ஏற்புடைக் கடவுளாதல்பற்றி,

"நீடாழியுலகத்துமறைநாலொடைந்தென்றுநிலைநிற்கவே
வாடாததவவாய்மைமுனிராசன்மாபாரதஞ்சொன்னநா
ளேடாகமாமேருவெற்பாகவங்கூரெழுத்தாணிதன்
கோடாகவெழுதும்பிரானைப்பணிந்தன்புகூர்வாமரோ"

என வாழ்த்துதல் போல்வது, இவ் விருவகை வாழ்த்தும் காப்புக் கருதிச் சொல்லப்படுவதால் ஆன்றோர்கள் இவற்றிற்குக் காப்பு, என்று பெயரிட்டு வழங்குவதும் உண்டு. இவ்வாறே காப்பின் பரியாயமான 'சரணம்' என்ற பெயராலும் வழங்கப்படும். இவ் வாழ்த்துகளெல்லாம் காத்தல் கருதிச் செய்யப்படுதலாற் காக்குங் கடவுளான திருமாலுக்குரியதாகவே கொள்ளவேண்டும். இதனை:—

"காப்புக்குமுன்னெடுக்குங்கடவுள் தான்மாலேயாகும்
பூப்புனைமலரின்செல்விபுனைபவனுதலாலும்
காப்பவனுதலாலுங்கதிர்முடிகடகந்தோடு
வாய்ப்பதாமதாணிபூணூல்வரிசையிற்புனைதலானும்"

என்று, ஜைனசமயத்தினரான சூடாமணி நிகண்டுடையாரும் ஓரஞ் சாராமல் உண்மையை வெளியிட்டிருப்பதாலு மறியலாம்.

ஆனால் பிறிதொரு கடவுளுக்குச் செய்யும் மங்களவாழ்த்தும் திருமாலுக்குரியதா யிருப்ப தெப்படி யெனில் "வேலையுந்திரையும் போல் வேறுபாடிலான்" என்கிறபடியே,

திருமால் கடல்போல முதற்பொருளாயும், பிறதெய்வங்கள் அக்கடலுக்கு உறுப்பாயுள்ள அலைகள்போல அத்திருமாலின் வேறுபாட்டில்லாத கூறுபாடுடையவர்களாயும், ஒன்றுபட்டிருப்பதால் கடலாடுவோர் அலையிலிட்ட புஷ்பபல தாம்பூலாதி பூஜோபஹாரங்கள் அக் கடற்றெய்வத்துக் குரியவாவன போலுமென்க.

அன்றியும் ரக்ஷககர்த்தாவான சர்வேசுவரன்தான் நேரே செய்யும் அந்வாரக்ஷணத்தோடு, நாவிஷ்ணு: பிரதிவீபதி: என்கிறபடியே தன் அம்சபூதர்களான லோகபாலர் முதலாயினரை வாயிலாகக் கொண்டும் லோகரக்ஷணம் செய்வதுபோல இதர தேவதை

களை வாயிலாகக்கொண்டும் அவ்வவ்வுபாசகர்களுக்கு அருள்புரிகிறு ஞகையால், கிராமாந்தரங்களில் ராஜபுருஷர்களிடம் செய்யும் ராஜ மரியாதை ராஜாவுக்குரியதாவதுபோல தேவதாந்தரங்களிற் செய் யும் சரணங்களும் "தேவதாநாஞ்சதைவதம்" என்று சொல்லப் பட்ட தேவதேவனுன திருமாலைச்சேரத்தட்டில்லை.

இது வேதசம்மதமான முடிவு என்பதை ஸர்வதேவ நமஸ் காரம் கேசவம் பிரதிகச்சதி, என்ற வேதோபப்பிரும்மணத்தாலும், 'வம்மின்புலவீர்..................நும்மின் கவிகொண்டு நும்மிட்ட தெய்வமேத்தினுற் செம்மின் சுடர்முடி எம் திருமாலுக்குச் சேருமே' என்ற தமிழ் மறையாலும், அறியலாம். இவ்வாற்ருல் திருமாவின் வேருன வழிபடுகடவுள், ஏற்புடைக் கடவுள் வணக் கங்களும் அக்கடவுள்களின் வாயிலாகத் திருமாலுக்கே உரியவா மென்பது தெளிவாயிற்று.

இன்னும் கல்வியிற்பெரிய கம்பநாடர் இராமாயண மங்கள வாழ்த்துள்ளாக மங்கள வாழ்த்தின் ஸ்வரூபத்தையும் நிரூபித்திருக் கிருர். அதன் முதற்பாட்டு,

"உலகம்யாவையுந்தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும்நீக்கலும்நீங்கலா
அலகிலாவிளையாட்டுடையார்அவர்
தலைவர்அன்னவர்க்கேசரணங்களே"

என்பது இதில் அகிலலோகங்களையும் ஆக்கி, அளித்து, அழிக்கும் முத்தொழில்களையும் ஸ்வதந்திரமாகக் கொண்டு தானே தன் னிச்சாமாத்திரத்தால், விளையாட்டுப்போல் எளிதாயியற்றுபவன் எவனே? அவனே சர்வேசுவரனென்றும், அவனுக்கே சரணங்கள் உரியனவென்றும் வரையறை செய்திருக்கிருர். இதிற் சரணங்கள் என்ற பன்மையால் அருகசரண முதலிய மங்கள வாழ்த்துக்களு மகப்படப் பிறதெய்வ வணக்கங்களெல்லாம் சர்வேசுவரனுக்கே யுரியனவென்பது பெறப்பட்டது.

இனி அப்படிப்பட்ட சர்வேசுவரனுடைய ஸ்வரூபங்களை அடுத்தபாட்டால் கூறுகிருர்.

"சிற்குணத்தர்தெரிவருநன்னிலை
எற்குணர்த்தரிதெண்ணியமூன்றனுள்
முற்குணத்தவரேமுதலோரவர்
நற்குணக்கடலாடுதல்நன்றரோ"

இப்பாட்டால், முற்பாட்டிற் சொல்லிய சர்வேசுவரனுடைய திவ்வியஸ்வரூபநிலை உருவமாயும், அருவமாயும், இருபடிப்பட்டிருக்குமென்றும், அவற்றுள் அருவநிலை ஞானஸ்வரூபமாகையால் அதனை அவனருளாலே சாக்ஷாத்கரித்தறிந்த ஆழ்வார் போல்வாரால்லது என்னுலுணர்தலியலாதென்றும் துதித்துக்கொண்டு, உணர்த்தற்குரியதாயுள்ள உருவநிலையில் சுத்தசத்துவமயமான ஸ்வரூபமுடையவனெவனோ? அவனே [முற்பாட்டிற் சொல்லியபடி] முத்தொழிலுமியற்றும் சர்வேசுவரனென்றும், அவனுடைய குணாதிசயங்களைக் கூறுவதே சிறந்த மங்களமென்றும், வலியுறுத்தியிருக்கிறார்.

இப்பாட்டில் நற்குணக்கடலாடுதல் என்பதற்கு கடல் போலும் மிக்க கல்யாண குணங்களை அநுபவித்தல் என்பதும் பொருளாமாயினும் அதனோடமையாது வாசிகமாகவும் செய்யும் மங்களவாழ்த்தும் பொருளாகக் கொள்ளத்தக்கது. இனிக் காயிக மங்களமும் அடுத்தபாட்டாற் பெறப்படும்.

முதற்பாட்டில் முத்தொழிலு முடையவனே சர்வேசுவரனென்று சொன்னவர் தாமே அடுத்தபாட்டில் சத்துவகுணமுடையவனே சர்வேசுவரன் என்றமையால் சத்துவகுணக் கடவுளுக்கே முத்தொழிலுடைமை கூறியவாறாயிற்று. எவ்வாறெனில் சத்வம் என்பதற்கு சத்தின்குணம் என்பது பொருளாம். ஆகவே அக்குணமுடைய மூர்த்தியே 'சத்' என்னும் சொற்குப் பொருளாய், என்றும் அழியாமல் நித்தியமாயிருக்கும் அச்சுதன் என்னும் திருநாமமுடைய பரம்பொருள் என்பது பெறப்பட்டது. அப்படிப்பட்ட பரம்பொருளே உலகுக்கு ஆதியில் சிருஷ்டி கர்த்தாவாகவும் அந்தத்தில் ஸம்ஹாரகர்த்தாவாகவும், இடையில் ஸ்திதிகர்த்தாவாகவும், இருக்கவேண்டுமாகையால்; முன் முத்தொழிலுமுடையவனே முதற்கடவுள் என்றதனோடு ஒற்றுமைப்பட்டிருப்பது காண்க.

இனி இவ்வாருக என்றும் அழியாத நித்யனுய்நின்று முத்தொழிலுமியற்றும் மூர்த்தி ஸ்ரீ ஹரிரூபியான பகவானென்று நிரூபிக்கிருர் அடுத்த பாட்டால்

ஆதியந்தம்அரியெனயாவையும்
ஓதினர்அலகில்லனவுள்ளன்
வேதமென்பனமெய்ந்நெறிநன்மையன்
பாதமல்லதுபற்றிலர்பற்றிலார்

இப்பாட்டுக்கு "அலகில்லன உள்ளன வேதமென்பன யாவையும் ஓதினர் பற்றிலார் ஆதி அந்தம் அரி என (அம்) மெய்ந்நெறி நன்மையன் பாதமல்லதுபற்றிலர்" எனக்கூட்டிப்பொருள்கொள்ளத் தக்கது.

இதன் பொருள் வேத முதலிய நூல்களையெல்லாம் ஓதியுணர்ந்த பெரியோர்கள் அவ்வேதாதி சாஸ்திரங்களில் ("ஆதியில் எதனிடத்திலிருந்து உலகங்களுண்டாயினவோ? எதனுல் அவை நிலைபெற்று நிற்கின்றனவோ? அந்தத்தில் எதன்கண் ஒடுங்குகின்றனவோ? அப்பொருளே பரம் பொருள் என்று சொல்லியிருக்கிறபடி உலகங்கள் தோன்றுதற்குக் காரணமான ஆதியும், அவை ஒடுங்குதற்கு இடமான அந்தமும், ஸாக்ஷாத் ஹரிரூபியான பகவானேயாமென்று தெளிந்து அவனுடைய திருவடிகளையே சரணமாகப் பற்றுகிருர்கள் என்பதாம்.

இதில் அலகில்லன என்றதனுல் வேதங்கள் அந்தமென்றும் 'உள்ளன' என்றதனுல் அவை சத்யமென்றும், பிரஸ்துதத்துக்குப் பிரமாண பெலமிருக்கும்படி காட்டப்பட்டது.

வேதம் என்ருெழியாது "வேதமென்பன" என்றதனுல் வேதங்களே யன்றி வேதோபப்பிரும்மணங்களான ஸ்மிருதீதிஹாஸாதிகளையும் தமிழ் மறைகளையும் அகப்படுத்தியதாயிற்று.

யாவையுமோதினர் என்றதனுல் அவை யெல்லாம் இந்நுவல் பொருளில் ஒரு முகப்பட்டிருப்பது காட்டியதாயிற்று.

பற்றிலார் என்றதனால் துரபிமான மற்றவர்களாய், நடுவு நிலைமையுடையரான அந்தணாளர் துணிபென்று நுவல் பொருளின் மெய்மை கூறியவாறு.

'ஆதி' அந்தம் அரி என்றது முதற்பாட்டிற் கூறிய முத் தொழிலு முடையவன் சத்துவகுண மூர்த்தியான ஹரியேயென்று சூசிப்பித்தபடி.

இதில் 'ஆதி' என்றதனால் உலகம் படைப்பவனான நான் முகனைத்தன் நாபீகமலத்திலிருந்தா தோன்றும்படி ஆதியாய்நின்று சிருஷ்டித்தமையால் ஸ்வதந்த்ரஸ்ருஷ்டி கருத்திருத்துவம் வித்திக் கிறது. அந்தம் என்றதனால் பிரளயகாலத்திலே ஸமஸ்தமான லோகங்களும் தன்னுள் ஒடுங்கும்படி ஸம்ஹரித்தலாலே 'ஹரி' என்றும், உலகமுண்டவனென்றும், பெயர் பெற்றிருப்பதாலும், ரக்ஷணத்துக்கு ரக்ஷ்யவஸ்துவின் விரோதியை ஸம்ஹரித்தலாலே லக்ஷணமாகையாலும் ஹரிக்கு ஸ்வதந்திரமாகவே ஸம்ஹாரகர்த் திருத்துவமுமுண்டென்பதும் பெறப்பட்டது.

இவற்றால் 'முக்குணத்தவரே முதலோர்' என்றபடி ஸத்து வகுணப் பிரதானனாகி ரக்ஷககர்த்தாவான ஸ்ரீஹரியே முதற்பாட் டிற் சொல்லியபடி ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் முத் தொழில்களையும் ஏவுதற்கருத்தாவும் இயற்றுதற்கருத்தாவு மாயிருந்து செய்யும் முதற்கடவுள் என்று ஒருமுடிபாக்கிக் காட் டப்பட்டது.

இன்னும் இதில் ஆதியந்தம் என்றது முழுதும் என்னும் பொருளுடையதாய், ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத் என்கிறபடியே எக்காலத்தும் எவ்விடத்தும் எப்பொருளிலும், இடையறுதியங் குதலாகிய ஸர்வவியாபகத்துவமும் குறித்து நின்றது.

இப்படிப்பட்ட ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்விய சரணார விந்தங்களையே சரணமாகப் பற்றும் காயிக மங்களம் கூறத் தொடங்கி அது வேதாதி சாஸ்த்ரஸித்தமாயிருப்பது மன்றிக்கே விஷ்டாசார ஸித்தமாயுள்ளதென்கிறார் "மெய்ந்நெறி நன்மையன் பாதமல்லது பற்றிலர் பற்றிலார்" என்ற வாக்கியத்தால்.

இங்கு "மெய்ந்நெறி நன்மையன்" என்றது உண்மையான உபாயமாகவும் "உபேயமாகவும் உள்ள ஸ்ரீமந்நாராயணனுடைய என்றபடி, உபாயமாவது விரும்பிய பயனடைதற்குச் சாதகமாயிருப்பது. உபேயமாவது விரும்பியடையும் பயனாயிருப்பது. விரும்பிய பயனடைதற்கு அவன் அருள் புரிதலால் உபாயமாயும், விரும்பியடையப்படும் பயன்களில் அவனே சிறந்தபயனாதலால் அவன் உபேயமாயிருப்பது காண்க. அவனையடைதற்கும் அவனருள் வேண்டுதலால் அதற்கும் அவன் உபாயமாயிருப்பது காண்க; இதனை "நெறிவாயில் தானேயாய் நின்றான்" என்ற தமிழ் மறையாலும் அறியலாம்.

இனி மெய், நெறி, நன்மை, என மூன்றாகப்பிரித்து அவற்றை முறையே ஸ்வரூப, உபாய, புருஷார்த்தங்களாகக் கொண்டு, "பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து, "என்கிறபடியே" அவற்றை உபதேசித்தருளியவன் எனவும் கொள்ளவைத்திருப்பதால் ஆசாரியனும் அவனே என்பதும், "ஆசாரியன் திருவடிகளே சரணம்" என்று பற்றுதலும் அகப்பட மங்களமாமென்பதும், சூசிதமாயிற்று.

பாதமல்லது பற்றிலர் என்றது—அந்வயத்தால், அவன் திருவடிகளைச் சரணமாகப்பற்றுதலே முக்கியோபாயமென விதித்தும் இதனையொழிந்த உபாயாந்தரங்களைச் சாதனமாகப்பற்றுகிறார்களில்லை, என வியதிரேகத்தால் விலக்கியும் காட்டியவாறு.

பற்றிலார் பற்றிலர், என்றதனால் சிஷ்டாசார ஸித்தம் என்பதும், சூசிதமாயிற்று. இன்னும் இப்பாட்டிற்கு, அலகில்லனவாயும் உள்ளனவாயுமுள்ள (வேதமென்பனயாவையும்) வேதாதி சாஸ்திரங்களை யெல்லாம் பூருவோத்ர சாந்தியாக ஆதியிலும் அந்தத்திலும் ஹரி: ஓம், என்று தொடங்கியும் ஹரி: ஓம் என்று முடித்தும் ஓதினராகி அவன் திருவடிகளையே சரணமாகப்பற்றுகிறார்கள் பற்றற்ற அந்தணாளர் எனப்பொருள் கொள்வதுமொன்று.

இவ்வாறு வேதத்தின் தொடக்கத்திலும், முடிவிலும், சொல்லப்படுவதால்; அது வேதத்தின் முன்னுரையும் முடிவுரையுமாகிய வேதார்த்த சாரசங்கிரக வாசகமென்பது பெறப்பட்டது.

இவ்வாறு வேதத்தின் முன் ஹரிநாம கீர்த்தனம் பண்ணப்படுவது தொன்மையான வழக்கென்பதை

"சுருதிஆதியிற்றொடங்குறமெல்லையிற்சொன்ன
ஒருவன்யாவர்க்கும்நாயகன் திருப்பெயருணரக்
கருதக்கேட்டிடக்கட்டுரைத்திடர்க்கடல்கடக்க
உரியமற்றிதின்கல்லதொன்றில்லெனவுரைத்தான்."

என இவர் தாமே பிரஹ்லாதாழ்வான் கூற்றில் வைத்து வேதாதியிற்றொடங்கும் மங்களம் ஹரிநாமமென்று காட்டியிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

இன்னும் வைதிக சமயத்தாரெழுதும் ஸ்ரீ கோசங்களிலெல்லாம் முதலேட்டின் தலைப்பில் மங்களமாக ஹரி: ஓம், நன்றாக, குருவாழ்க, குருவேதுணை என்று எழுதிவருவதும் கிரந்தகோசங்களில் ஹரிஓம் சுபமஸ்து குருப்யோநம: என்று எழுதிவருவதும் இதனை வலியுறுத்தும்.

இன்னும் பாலர்களுக்குத் தமிழில் அக்ஷராரம்பம் செய்விக்கும்போது தொடக்கத்தில் ஹரி: ஓம், நமோத்து சிந்தம் என்று மங்களவாழ்த்துச் சொல்லுவிக்கப்படுகிறது" இதில் ஹரி: ஓம், என்பது ஒருவாக்கியமும், நமோத்து என்பது ஒருவாக்கியமும், சிந்தம் என்பது ஒருவாக்கியமுமாக மூன்று வாக்கியங்களுள்ளன. இவற்றுள் முதல் வாக்கியமான 'ஹரி: ஓம்' என்பதற்கு ஹரி ரூபியான பகவான் சகலவேத சங்கிரகமான ஓம்காரப்பொருளாயிருக்கிறான் என்பது பொருளாம். இதனால் ஹரியே சகல வேதங்களாலும் பிரதிபாதிக்கப்பட்டவன் என்பதை யுணர்த்தி அவனது ஸ்துதிரூபமான வாழ்த்து என்னும் மங்களம் செய்யப்பட்டதாயிற்று.

இனி இரண்டாம் வாக்கியம் 'நம: அஸ்து என்னும் இரண்டு மொழிகள் சந்தியால் தொடர்ந்த நமோஸ்து என்னும் வடமொழி திரிந்து'நமோத்து' என்றாயிற்று. இதில் 'நம: என்பதற்கு வணக்கமும், அஸ்து என்பதற்கு உள்ளதாக வேண்டும் என்பதும், பொருளாம். ஆகவே கீழ்ச்சொன்ன வாக்கியப் பொருளைச் சுட்டிக்கூட்டிப் பொருள்கொள்ள ஓம்காரப் பொருளான ஹரியின் பொருட்டு வணக்கம் உள்ளதாகவேண்டும், என வணக்கம் என்னும் மங்களம் சொல்லப்பட்டதாகும்.

இனி சிந்தம் என்பது சித்தம் என்னும் வடமொழியின் திரிபாய், தெளியப்பட்டது என்னும் பொருளுடையதாய்க் கீழே சொல்லிய வணக்கத்தைச் சுட்டி இது எல்லோர்க்கும் உடன்பாடான துணிபு; இதுவே பேறுயுமுள்ளது என்று வலியுறுத்துகிறது.

இம்மங்களம் கிரந்த அரிச்சுவடியில் இன்னும் நன்கு விரித்துச் சொல்லப்பட்டு வருகிறது. அதன் பொருளெல்லாம் இங்கு விரிப்பிற் பெருகும்.

இம்மங்கள வாழ்த்திற்குப்பயன், இடையூறொழிதலும், எண்ணிய கருமமினிது, முடிதலுமாம் இடையூறொழிதலை,

தாயைக்குடல்விளக்கம்செய்த தாமோதரனைத்
தூயோமாய்வந்துநாம்தூமலர்தூவித்தொழுது
வாயினாற்பாடிமனத்தினாற்சிந்திக்கப்
போயபிழையும்புகுதருவானின்றனவும்
தீயினிற்றூசாகும்'' ... ...

என்பதனாலறியலாம். எண்ணியவெல்லாம் இனிதுமுடிதலை

''காமமாதியதருவதும்அப்பதங்கழித்தாற்
சேமவீடுறச்செய்வதுமெவற்றினுஞ்சிறந்த
ஓமவேள்வியினுறுபயன்றுய்ப்பதும்ஒருவன்
நாமம்அன்னதுகேள்நமோநாராயணாய''

என்பதனாலறியலாம். ஆகவே ஒவ்வொரு ஸத்கர்மங்களையும் தொடங்குங் காலத்தில் ரக்ஷக கர்த்தாவாயும், ஸ்ரீய: பதியாயும், மங்களமூர்த்தியாயுமுள்ள ஸ்ரீமந்நாராயணனை மனத்தானினைந்து வாயால் வாழ்த்தித் தலையால் வணங்கி அவனை வழிபட்டொழுகுதலே சிறந்த மங்களமாமென்பது தெளிவாயிற்று.

திரு— நாராயணையங்கார்,

சேந்தமிழ்ப்பத்திராதிபர்.

மதுரை.

ஈசுவரபக்ஷபாதமில்லாமை.

வினு:- மனிதனுய்ப் பிறந்தவன் யாது செய்யவேண்டும்?

விடை:-உண்மை நூல்களைப்படித்து, நன்மைதீமைகளை ஆராய்ந்து அறிவுடையவனுயிருத்தல்வேண்டும்?

வினு:- அவ்வாறு கற்று நன்மைதீமைகளை ஆராயாதிருப்பானுகில் அவன் எவ்வாறு கருதப்படுவான்?

விடை:-அவன் மிருகத்திற்குச் சமமாகக் கருதப்படுவான்.

வினு:- உண்மை நூல் எவை?

விடை:-நல்லறிவை உண்டாக்குகின்ற நூல்களாம்.

வினு:- அந்நூல்களில் உலகைப்படைத்தவன் யாவன் என்று கூறப்பட்டுளது?

விடை:-கடவுள் என்று கூறப்பட்டுளது.

வினு:- கடவுள் எத்தன்மையுடையவன்?

விடை:-எல்லாமறிந்தவன், எல்லாமுடையவன், தேவர், தானவர், மனுஷ்யா, முதலிய எல்லோர்க்கும் பொதுவாயிருப்பவன். அருளுடையவன், பக்ஷபாதமில்லாதவன்.

வினு:- கடவுள் எல்லோருக்கும் பொதுவாயும், பக்ஷபாதமில்லாதவனுயும், அருளுடையவனுயும், இருப்பானுகில், தேவ, மனுஷ்ய, விலங்கு, ஸ்தாவர, பேதங்களை உண்டுபண்ணித் தேவசரீரம் பெற்றவர்கள் இன்பங்களை அனுபவித்தற்குரியவர்களாகவும், மனுஷ்யசரீரம் பெற்றவர்கள் இன்பதுன்பங்களை அநுபவித்தற்குரியவர்களாகவும் விலங்கு ஸ்தாவர சரீரங்களைப் பெற்றவைகள் பாபபலத்தை அநுபவித்ற்குரியவைகளாகவும் உண்டுபண்ணுதற்குக் காரணம் யாது?

விடை:-ஆத்மாக்கள் செய்த புண்ணிய பாபங்கட்குத் தகுதியாக இந்த பேதங்களைக் கொடுத்தானென் றறியவேண்டும்.

வினா:- அது பொருந்தாது? ஏனென்றால்
"தேநவினாத்ருணம்பிநசலதி"
(அவனன்றி ஒரு துரும்பும் அசையாது) என்றும்
"கர்த்தாகாரயிதாசஸஹ"
(அவனே எல்லாஞ் செய்கிறவன் செய்விக்கிறவன்)

என்றுங்கூறியபடி, கடவுளில்லாமல் ஒரு காரியமுமாகிற தில்லை யெனவும், அவனே எல்லாஞ் செய்விக்கின்றானென வும், தோற்றுகிறதல்லவா, அவ்வாறிருக்க, "தென்னையில் தேள்கொட்டப் பனையில் நெறியேறியது" என்னும் பழமொழிபோல புண்ணிய பாபங்களைச் செய்விக்கிற ஸர்வேசுவரன் அப்புண்ணிய பாபபலங்களை யனுபவிக்காமல், ஒன்றுமறியாத ஆத்மாக்கள் புண்ணியபாபங்களைச் செய்கின்றனவென்றும், அவற்றிற்குரிய பலங்களை அநுபவிக்கின்றனவென்றும், ஒப்புக்கொள்வது எப்படி?

விடை:-ஒப்புக்கொள்ளவேண்டியதுதான்.

வினா:- தக்கபிரமாணங் கூறாமல் ஒப்புக்கொள்ள வேண்டியதுதானென்றால் ஒப்புக்கொள்வ தெங்ஙனம்? மிற்கு ஸர்வேசுவரன் ஆத்மாக்களைத் தேவமனுஷ்யர் முதலான பேதமில்லாமல் சிருஷ்டித்து எல்லாவற்றிற்கும் ஒரேவிதமான இன்பங்களைக் கொடுக்காததினால் பக்ஷபாதமுடையவனென்பதும், அருளுடையவனாயிருப்பானாகில் பிறர் துக்கங்களைக் கண்டவுடன் ஐயோவென்றிரங்கி, அத் துக்கங்களைப் போக்கவேண்டுமன்றோ அது செய்யாமல் ஆத்மாக்கள் செய்யும் பாபச்செயல்களைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு அவற்றிற்கு அநுமதியுங் கொடுத்துவருகின்றானதலால் அருளற்றவனெனவும் அறியக் கிடக்கின்றன. இவற்றுக்கெல்லாம் தக்க ஸமாதானம் கூறுக?

விடை:-தேவமனுஷ்யாதி பேதங்களை ஸர்வேசுவரன் ஆத்மாக்கள் செய்த புண்ணிய பாபங்கட்குத் தகுதியாகவே செய்கின்றானெனக் கொள்ளவேண்டும். எவ்வாறென்றால்? இவ் வாத்மாக்கள் சரீரேந்திரியங்களை இழந்திருந்தகாலத்து அவற்

றைக்கொடுத்து பிரவர்த்தி நிவர்த்தி ஸக்திகளேயுங் கொடுத்து, நல்லகாரியங்களை ஆராய்ந்து நடப்பதற்குச் சாஸ்திரங்களேயு மளித்து, உபகரித்தான். ஆத்மாக்கள் இச் சாதனங்களைக்கொண்டு ஒவ்வொரு காரியங்களில் முயற்சிக்கின்றன. அவ்வாறு முயற்சிக்கும் முன்முயற்சிகளில் ஸர்வேசுவரன் ஸம்பந்தமற்றவனுயிருக்கின்ருன்.

வினு:- ஆத்மாக்கள் செய்யும் முன்முயற்சிகளில் ஸர்வேசுவரனுக்குச் சம்பந்தமில்லையென்ருல்? அவன் ஸர்வகாரணன் என்பது எவ்வாறு பொருந்தும்?

விடை:-குடம் உண்டாவதற்குக் குயவன் மண் தண்டசக்கரங்கள் முக்கிய காரணங்களாகவும், காலம் இடம் முதலியவை பொதுக்காரணங்களாகவும், கொள்வதுபோல ஆத்மாக்கள் ஒவ்வொரு காரியங்களிற்செய்யும் முன்முயற்சிகளில் அவ்வாத்மாக்கள் முக்கிய காரணங்களாலும்; அவைகள் முயற்சி செய்வதற்கு ஹேதுவாகிய பிரவர்த்தி நிவர்த்தி ஸக்திகளைக்கொடுத்தவன் ஸர்வேசுவரனுதலால், அவன் பொதுக்காரணமாகின்ருன். ஆதலால் ஸர்வகாரணன் என்பதற்கு யாதொரு குறையுமில்லை. மந்திரியானவன் ஒரு காரியஞ்செய்ய முயற்சிப்பானுகில், அக்காரியம் அரசன் உத்திரவில்லாமல் எவ்வாறு முடிவுபெறுகிறதில்லையோ அதுபோல் ஆத்மாக்கள் ஸர்வேசுவரன் ஸம்பந்தமில்லாமல் முயற்சித்த முன்முயற்சிகள் பின் அவ் ஈசுவரன் உத்திரவில்லாமல் முடிவு பெறுவதில்லையாதலால், அவனன்றி ஒரு காரியமாகிறதில்லையெனவும், அவனே எல்லாஞ் செய்விக்கின்ருனெனவும், சொல்லப்பட்டன.

வினு:- ஆத்மாக்களின் முன்முயற்சிகளும் ஒரு ஆத்மா விரும்பியதுபோல் மற்ருெரு ஆத்மா விரும்பாமையால் பலவகையாகக் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படுவதற்குக் காரணம் யாது?

விடை:-அந்தந்த ஆத்மாக்கள் செய்த பூர்வஜன்மத்தின் புண்ணிய பாபங்கட்குத் தகுதியாக, முயற்சிக்கின்றனவாதலால் அவைகளின் முயற்சிகளும் பல்வேறுவகையாக இருக்குமென்றறியவேண்டும்.

வினு:- அநாதியான புண்ணிய பாபங்கள் இவ்வாத்மாக்களை ஏவ அதின்படி இவ்வாத்மாக்கள் புண்ணியபாபங்களைச் செய்கின்றனவென்றால்; இவைகட்கு நரகமுதலான அநுபவ முண்டாகும் வகை எப்படி?

விடை:-ஒருவனுக்குப் பசியுண்டாகுமானால், அப் பசியானது உணவை உண்ணும்படி அப் பசியாளனுக்கு ருசியை விளைவிக்கும்; பின்னர் அவன் உண்ணுதற்கு முயற்சிக்கும் பொழுது மற்றொருவன் நீ உண்ண ஆசைப்படும் உணவில் விஷங் கலந்திருக்கிறதென்று அறிவித்தான். இவன் அஃதறிந்து இதை நாமுண்டால் இது நம்முயிரை முடிக்குமென்ற கருத்தால் பசியின் கொடுமையையுந் தாங்கிக் கொண்டு உண்ணாற்றொழிலை விட்டொழிக்கின்றான். இதனால், அப் பசியானது ஆசையைமாத்திரம் விளைவித்ததென்பதும், அப் பசியாளன் ஆசையாலுண்டாகுந் தீங்கை நீனைத்து அவ்வாசையை ஒழிக்கும் வல்லவனானென்பதும், விளங்குகின்றன. அதுபோல புண்ணிய பாபங்கள் புண்ணியபாப பலங்கட்குத் தகுதியான, ருசியை விளைவிக்குமேயன்றி, மற்றொரு புண்ணியபாபங்களை உண்டு பண்ணமாட்டா; அவை ருசியை உண்டாக்குகின்ற காலத்தில் ஜீவன் தன் பிரவர்த்தி நிவர்த்தி ஸக்தியால்பாபபலத்திலுண்டாகும் ஆசை விஷயத்தில் பயந்து அதைத் தவிர்த்து நடப்பதற்கும், புண்ணிய பலத்தாலுண்டாகும் ஆசை விஷயத்தில் மனக்களிப்புடன் அதை மேற்கொண்டு நடப்பதற்கும், உரியனாவான். ஆதலால் அநாதியான கர்மஞ் செய்விக்க இவ்வாத்மாக்கள் செய்கின்றனவென்று, கர்மத்திற்குச் சிறப்புக்கூறுதல் தகாது.

சில ஆத்மாக்கள் நல்லகாரியத்தை விட்டுக் கெட்டகாரியத்தில் பிரவேசிக்கின்றதினால் அவைகட்கு நரகாநுபவம் உண்டாகின்றனவென்று அறியவேண்டும்.

வினு:- ஆத்மாக்கள் செய்யும் முன்முயற்சிகளில் ஸர்வேசுவரன் ஸம்பந்தமற்றவனாயிருக்கிறானென்றால்; முன்முயற்சிகளைக் கொண்டு இவ்வாத்மாக்கள் காரியம் செய்யமுடியுமா?

விடை:-முடியாது.

வினு:- பின்னே இவ் வாத்மாக்கள் எவ்வாறு காரியங்கள் செய்யும்?

விடை:-பின் இரண்டாவது முயற்சிகளில் ஸர்வேசுவரன் உத்திரவு செய்தபிறகு, ஆத்மாக்கள் செய்த முன்முயற்சிகள் பிரயோஜனப்படுகின்றன.

வினு:- அப்படியானுல் ஸர்வேசுவரன் செய்யும் உத்திரவன்ருே முக்ய பிரயோஜனமாகிறது; ஆகவே இவ் வாத்மாக்கள் செய்யும் புண்ணியபாபபலங்கள் ஸர்வேசுவரனேச் சென்றடையவேண்டு மல்லவா?

விடை:-தமையன் தம்பியர் மூவருக்கும் பொதுவாயிருக்கிற பொருளில், தம்பிகள் இருவருள் ஒருவன் தமையனுடைய உத்திரவுபெற்றுச் சிறிதுபொருள் வாங்கிச்சென்ருன். மற்ருெருவன் ஒரு எலுமிச்சம்பழத்தை மூத்தோனுடைய உத்திரவுபெற்று எடுத்துச்சென்ருன். இந்த இரண்டு பேர்களுள் சிறிதுபொருள் பெற்றுச் சென்றவன் வியாபாரஞ் செய்து, நஷ்டமடைந்தான். எலுமிச்சம்பழம் எடுத்துச் சென்றவன் அரசனேயடைந்து அவ் வெலுமிச்சம் பழத்தால் அவ்வரசனே மகிழ்வுறச்செய்து, இராஜ்ய ஸம்பத்தையடைந்தான். இவ்விரண்டு பேர்களுள் முன் வியாபாரஞ் செய்து நஷ்டமடைந்தவனது நஷ்டமும், இராஜ்ய ஸ்ம்பத்தைப் பெற்றவனது லாபமும், இருவருக்கும் உத்திரவு கொடுத்த மூத்தவனுக்கு வருகிறதில்லே. நிற்க, எஜமானன் பல்லக்குச் சுமக்குமவர்களேப் பல்லக்குச் சுமக்கக்கடவீர்கள் என்று உத்திரவு செய்தால், உடனே அவ்வுத்திரவின்படி சுமக்கின்ருர்கள். சுமந்ததனுலுண்டாகிய இளேப்பு முதலிய கஷ்டங்கள் உத்திரவுசெய்த எஜமானனுக்குண்டாகின்றதில்லே. அவைபோல் ஆத்மாக்களின் பின் முயற்சிகளில் ஸர்வேசுவரன் செய்யும் உத்திரவாலுண்டாம் பயன்கள் ஸர்வேசுவரனேச் சென்றடையா என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

வினு:- ஆத்மாக்கட்குப் பூர்வ கர்மபலத்தின்படி ஒரு காரியத்தில் இச்சையும், ஒரு காரியத்தில் வெறுப்புமுண்டாகுமானுல்; இவைகட்குப் பூர்வகர்மம் எவ்வாறு வந்தது?

விடை:-கர்மம் அநாதியாகையால் வந்ததென்றறிக.

வினு:- கர்மமுண்டாகிறது நசிக்கிறது என லோகவியவகாரமுண்டாகக் காண்கிறதினுல், அக் கர்மத்திற்கு முதல் இன்னகாலமென்றும், முடிவு இன்னகாலமென்றும், தோன்றவேண்டுமாதலால்; எக்காலமுதல் இக்கர்மம் தோன்றியது?

விடை:-இங்கு அநாதியென்றது இன்னகாலத்திற் ருேன்றியதென்றறியமுடியாத, ஆதியை யுடையதென்று பொருள்கொள்ளவேண்டும்.

வினு:- ஆகாயத்தாமரை மலடிமகன் என்பனபோல அறியப்படாத ஆதியென்ப தொன்றுண்டோ?

விடை:-உண்டு.

வினு:- எப்படி?

விடை:-பீஜாங்குரம் (விதைமுளை) என்ற இவ்விரண்டில் மரத்திற்கு விதை முதலா? விதைக்கு மரமுதலா? என்ருல் இன்னது தான் முதலென்று சொல்லமுடியாதோ அதுபோல அநாதி என்பதற்கு இன்னகாலத்திற் ருேன்றியதென்றறியமுடியாதென்று பொருள்கொள்ளின் ஒரு குறையுமின்றென்றறிக.

வினு:- இதுவரையுங் கூறியவற்றைத் தொகுத்துக் கூறுக?

விடை:-இதுவரையுங் கூறியவாற்ருல் ஆத்மாக்கள் செய்த பூர்வ கர்மத்தின்படி, தேவமனுஷ்யாதி பேதங்களை ஸர்வேசுவரனுண்டுபண்ணுகின்ருனெனவும், அக்கர்மமும் அநாதி எனவும், ஸர்வேசுவரன் கொடுத்த பிரவர்த்தி ஸக்திகளைக் கொண்டு நல்ல காரியத்தில் முயற்சிக்காவிட்டால், அ

பாவங்கள் ஆத்மாக்களையே சென்றடையுமெனவும்; ஆத்மாக்களின் முன்முயற்சிகளில் ஸர்வேசுவரனுடைய ஸம்பந்தமில்லையாதலால்; அவைகள் செய்த பாபங்கள் ஸர்வேசுவரனைச் சென்றடையமாட்டா எனவும், ஸர்வேசுவரன் முறையறிந்து, ஆத்மாக்கட்கு இன்பதுன்பங்களைக் கொடுக்கின்றானாதலால், பக்ஷபாதமுடையவனாகான் எனவும், சொல்லப்பட்டன.

வினா:- ஸர்வேசுவரன் பக்ஷபாதமற்றவனென்று ஒப்புக்கொள்ளத்தக்கதானாலும்; அருளற்றவனென்ற தோஷமுண்டாகிறது. எவ்வாறென்றால் அருளும் ஸக்தியுமுடையானொருவன் முன்னிலையில் ஸக்தியற்றவனொருவன் கிணற்றில் விழுவானாகில் வீழ்ந்தவனை; அருளுடையான் கரையேற்றிவைக்க வேண்டும். கரையேற்றானாகின் அவனை அருளுடையானென்று சொல்லப்படாது. அதுபோல மிகவும் துக்கமான பாபத்தில் இவ்வாத்மாக்கள் பிரவர்த்திக்கின்ற காலத்தில், இறைவன் அவை பிரவர்த்திக்க ஒட்டாமல் தடுக்க வேண்டும். அது செய்யாமலிருக்கின்றானாதலால், இறைவன் அருளற்றவனென்றே சொல்லவேண்டுமல்லவா?

விடை:-அவ்வாறு சொல்லலாகாது. இங்குக்காட்டிய திருஷ்டாந்தம் பொருந்தாது. ஏனென்றால் ஸக்தியற்றவனொருவன் கிணற்றில்விழப் பார்த்துக்கொண்டிருப்பது ஸக்தியுமருளுமுடையவனுக்குத் தக்கதன்றேயாம். ஸக்தியுடையவனாய் நீர் விளையாட்டிற்காகக் குதிப்பானாகில், ஸக்தியுமருளுமுடையவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பானல்லவா? அதுபோல பிரவர்த்தி நிவர்த்தி ஸக்திகளைப்பெற்ற ஆத்மாக்கள் தீயவழியிற்பிரவேசிப்பதைத் தடுக்க ஸர்வேசுவரன் அநுமதிசெய்துகொண்டிருக்கின்றான்; எக்கருத்தால் அநுமதி செய்து கொண்டிருக்கின்றானென்றால்; அரசன் தீயவழியிற் செல்லுகின்றவர்களைத் தண்டித்துப் பயமுண்டாக்கி நல்லவழியிற் செலுத்துகிறதுபோல தீயவழியிற் செல்லுகிற ஆத்மாக்களைப் பாபபலங்களை அநுபவிக்கச் செய்தால் பயந்து, பின் அவைகள் நல்லவழியிற் புகும்; என்ற கருத்தாற் செய்கிறானென அறியவேண்டியது.

தண்டிப்பதானது மிகவும் துக்ககரமாயிருப்பதால், இச் செயலைச் செய்கின்ற ஸர்வேசுவரன் நீதியுடையவனென்று எவ்வாறு சொல்வது?

விடை:-"குடிபுறங்காத் தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்" எனவும்,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்." எனவும் கூறியபடி,

கொடியவர்களை வேந்தன் தண்டிப்பது; குற்றமாகாது; அவனுடைய தருமமெனவும், அவர்களைத் தண்டிப்பது விளைபயிரின் களையெடுத்தலை ஒக்குமெனவுங், கூறியவாற்றால் ஸர்வேசுவரன் கொடியவர்களைத் தண்டிப்பது நன்மையேயன்றி வேறல்லவென உணர வேண்டும்.

வினா:- "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை"

என்றபடி, குற்றமுடையவர்களையும் பொறுத்தலன்றோ பொறையுடைமைக் கழகாகும். அவ்வாறிருக்க பொறைக்கெல்லாம் உற்பத்தி ஸ்தானமென்று சொல்லப்படும்; ஸர்வேசுவரன் குற்றமுடையவர்களைப் பொறுத்து ஆதரிக்கின்றானில்லையென்றால்: அவனைப் பொறையுடையவனென்று எவ்வாறு சொல்வது?

விடை:-ஆத்மாக்கள் எத்தனையோ கற்பகற்பகாலமெல்லாம் அநுபவித்துக் கழிக்கத்தக்க மஹா பாபச்செயல்களை ஒரு க்ஷணநேரத்தில் செய்துவிடுகின்றன. இவ்வாறு செய்த பாபங்கள் கணக்கற்றன. இங்ஙனம் கணக்கற்ற பாபங்களைச் செய்த ஆத்மாக்கள் ஸர்வேசுவரனை யடையவேண்டுமென்ற ஒரு நல்லறிவு அவைகட்குண்டாகுமாகில், இவ்வளவு பாபங்களையும் பொறுத்துக் காக்கின்றானாதலால்; அவன் மிகுந்த அருளுடையவனென்பதற்கு யாதொரு குறைவுமில்லை என்க.

வினு:- ஆத்மாக்கள் செய்த புண்ணியபாபங்கட்குத் தகுதியாக ஸர்வேசுவரன் அவைகட்குப் பலத்தைக் கொடுக்கின்ருனென்ருல், புண்ணிய பாபங்களன்றோ ஸ்வதந்தர கர்த்தாவாகவும் அவற்றை எதிர்பார்த்து ஸர்வேசுவரன் பலங்களைக் கொடுக்கின்றதிஞல் ஸர்வேசுவரன் ஸ்வதந்தரமற்றவனுகவுந் தோன்றுகின்றதே?

விடை:-ஸர்வேசுவரன் புண்ணியபாபங்கட்குத் தகுதியாக நாம் பலங்களைக் கொடுக்கக்கடவோம் என்று சங்கற்பிக்கிருன். அச் சங்கற்பம், யாவராலுந் தடுக்கப்படாமல் பல்லூழி காலம் நடைபெற்று வருகின்றமையால் அவன் ஸ்வாதந்தர்யம் விர்த்தியடைகின்றதேயன்றிக் குறைகிறதில்லை.

வினு:- இதுவரையுங் கூறியவற்றைத் தொகுத்துக் கூறுக?

விடை:-தீயவழியிற் செல்லும் ஆத்மாக்களை இனியாவது அவ்வழியிற் செல்லாதிருக்கவேண்டுமென்ற கருத்தால் அவைகள் பாபபலங்களை அநுபவிக்கும்படி செய்கின்ருனுதலால், ஸர்வேசுவரன் அருளுடையவனென்பதும், தன்னையடைய வேண்டுமென்ற எண்ணமுடையவர்கள் மஹா பாபிகளானுலும் அவர்கள் செய்த பாபங்களைப் பொறுத்துக் காக்கிருனுதலால் பொறையுடையவனென்பதும், ஆத்மாக்களின் புண்ணியபாபங்கட்குத் தகுதியாக அவற்றைச் சிக்ஷிக்கக் கடவனென்ற ஸர்வேசுவரனுடைய சங்கற்பம் பல்லூழி காலம் நடைபெற்று வருகின்றதினுல் அவன் ஸ்வாதந்தர்யம் விர்த்தியடைகின்றதென்பதும், உரைக்கப்பட்டன.

இங்ஙனம்,
நியாயவேதாந்த வித்வான்,
தேசிகவரதாசார்யர்,.
தென்னுசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண ஸபை.
ஸ்ரீரங்கம்.

ஶ்ரீ:

அவதார ரஹஸ்யம்.

அவதார ரஹஸ்யமாவது-நல்லோர்களைப் பாதுகாப்பதற்கு ஸர்வேசுவரன் பல ஜன்மங்களிற் பிறந்த பிறப்பின் ரஹஸ்யமாம். ரஹஸ்யமாவது-எல்லோர்களாலும் அறியப்படாமல், சிலர்கள்மாத்திரமே அறியத்தக்க விஷயமாம். ஸர்வேசுவரன் இராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்தகாலத்து வசிஷ்டர், விசுவாமித்திரர், பீஷ்மர், விதுரர், அக்குரூரர், சபரி முதலிய சிலர்களே அவ்வவதாரங்களின் உண்மையறிந்தார்கள். எவ்வாறறிந்தார்களெனின், உலோகத்தைப் பாதுகாப்பதற்குக் கடவுளே இங்குவந் தவதரித்திருக்கின்றானெனவும், இவன் நம்மைப்போல் கர்மவசத்தால் வந்து பிறந்தவனில்லை யெனவும், தனது இச்சையால் வந்து பிறந்தவனெனவும், இவன் பிறப்பும்; பிறந்து செய்த தொழிலும், திவ்யமெனவும், அறிந்தார்கள். இவ்வாறு ஸர்வேசுவரனுடைய அவதார உண்மையறிந்தவர்கள்; எப்பொழுதும் துக்கத்தைத் தருகிற இந்தச் சரீரத்தைவிட்டு மோக்ஷமடைந்து நித்யானந்தவாழ்வை யடைவார்கள். இவ்வுண்மையறியாத பலர் பிருகுமகருஷியின் சாபத்தால் வந்து பிறந்தான் என்பார்கள். இவர்கள் பிறப்பிறப்பென்னும் துக்கக் கடலிற் கிடந்து உழல்பவராவர்.

ஸர்வேசுவரனது அவதாரத்தின் உண்மையறியாதார் எவ்வளவு சிறப்புடையராயினும், மோக்ஷமடையார்கள். அவன் அவதாரத்தின் உண்மையறிந்தவர்கள் எவ்வளவு சிறுமையுடையவராயினும் மோக்ஷமடைவார். இவ்விஷயம் கீழ்வரும் வரலாற்றாலறிக.

தசரதசக்கரவர்த்தி என்பவர் இக்ஷுவாகு குலத்திற்றோன்றியவர்; அவர் வசிஷ்டர் முதலானோரைக் குருக்களாகவும், சுமந்திரர் முதலானோரை மந்திரிகளாகவும், பெற்றவர்; ஏழையாகிய ஓர் உழவினன் தனக்கு ஒருசெய் நிலம் இருக்குமாகில் அதைக் கண்ணுங்கருத்துமாயிருந்து எவ்வாறு பாதுகாத்து வருவானோ, அதுபோல் உலகத்தைப் பாதுகாக்கும் பெருந்தகைமையுடையவர்; வேந்தர்க்குரிய யாகங்களெல்லாம் செய்து முடித்த புகழுடையவர்;

தேவேந்திரனுக்குப் பகைவனாகிய சம்பராசுரனைவென்று அவனுக்கு இந்திரபதவியை நிலையுறச்செய்தவர்; இதனால் இச் சக்கரவர்த்தி, குலத்தாலும், நலத்தாலும், அருளினாலும், ஆற்றலாலும், அறிவாலும், புகழாலும், பெருமையுடையவராய் விளங்கினாரென்பது வெளியாகிறது. இவ்வாறு விளங்கிய இச் சக்கரவர்த்தி, லோகத்தைப் பாதுகாத்தற்காக அவதரித்த பரப்பிர்மமாகிய இராமனை அங்ஙனம் அறியாமல் தனக்குப் புத்திரனாகப்பாராட்டி இராமபிரான் வனவாசம் அடைந்தகாலத்து அவன் பிரிவைச் சகிக்காமல் துக்கித்து உயிர் துறந்தனர்.

இச் சக்கரவர்த்தி இராமபிரானைத் தனக்குப் புத்திரனென்றே கருதி உயிர்துறந்தாராதலால்; செய்த புண்ணியத்திற்குத் தகுதியாக சுவர்க்கம் அடைந்தாரேயன்றி, விசேஷஜ்ஞானமின்மையால் மோக்ஷமடையவில்லை.

"தேனகுமாமலர்க்கூந்தற்கௌசலையுஞ்சுமித்திரையுஞ்சிந்தைநோவக்
கூனுருவில்கொடுந்தொழுத்தைசொற்கேட்டகொடியவடன்சொற்
கொண்டின்று
கானகமேமிகவிரும்பிநீதுறந்தவளநகரைத்துறந்துநானும்
வானகமேமிகவிரும்பிப்போகின்றேன்மனுகுலத்தார்தங்கள்கோவே"

என்றதனாலும் அறிக.

ஒருத்தி மகனாய்ப்பிறந்து ஓரிரவில் ஒருத்திமகனாய் ஒளித்து வளர்ந்த கண்ணபிரான் ஆயர்பாடியில் திருவிளையாடல் செய்துவருகின்ற காலத்து ஒருநாள் கோபிமார்கள் கண்ணன் வெண்ணெயைத் திருடினானென்று அவனை மத்தாலடிக்கவர அப்பொழுது அக் கண்ணன் பயந்தவன்போல் ஓடித் ததிபாண்டனை யடைந்து என்னைக் காக்கவேண்டுமென அடைக்கலம் புகுந்தனன். அப்பொழுது அத் ததிபாண்டன் கண்ணனைத் தன் தயிர்ப்பானைக்குள் அடைத்து ஒருவரும் அறியாவண்ணம் செய்தான். சிறிதுநேரம் சென்றபின் தயிர்ப்பானைக்குள் இருந்த கண்ணன் ஓ ததிபாண்டனே! என்னை வெளியில்விடு வெளியில்விடு எனக் கூக்குரலிட்டான். அதுகேட்ட ததிபாண்டன் இவன் கடவுள் இவ்வாறு விளையாட்டுச் செய்கின்றா

னென அவனது அவதாரத்தின் உண்மையறிந்து எனக்கு நீ மோக்ஷங்கொடுத்தாலன்றி உன்னை நான் வெளியில் விட்டேனென்றான்

கண்ணன்:- மோக்ஷம் சாமான்யமாய் அடையத்தக்கதன்று நீ இப்பொழுது தயிர்விற்றுச் ஜீவிக்கின்ற புல்லிய தொழிலை மேற்கொண்டு வருந்துகின்றாய்; இவ்வருத்தம் நீங்க மிகுந்த ஐசுவர்யத்தைக் கொடுக்கின்றேன், அதைப்பெற்று மகிழ்வாயாக.

ததிபாண்டன்:- ஐசுவர்யம் நாசமுடையதாதலால் வேண்டாம்.

கண்:- ஆனால் நீ விரும்பிய மோக்ஷத்திற்குச் சாதனமாயிருக்கிற கர்ம ஜ்ஞாந பக்திகள் உனக்குண்டோ?

ததி:- எனக்கு அவை ஒன்றுமில்லை.

கண்:- அப்படியானால் நீ விரும்பிய மோக்ஷமில்லை.

ததி:- கர்மஜ்ஞாநபக்திகளைக் காட்டிலும், நிலைநின்ற ஸநாதன தர்மமாகிய உன்னையே தஞ்சமாகப்பற்றிய எனக்கு மோக்ஷமில்லாதொழிகைக்குக் காரணமில்லையே?

கண்:- ஆ! ஆ! என்ன ஆச்சர்யம். இத் ததிபாண்டனுக்குண்டாகிய அறிவை எவ்வாறு புகழ்ந்துரைப்போம். நாம், இப்பொழுது இத் ததிபாண்டனை அடைக்கலமாக அடைந்தோம்; இவன் நம்மைத் தயிர்ப்பானையில் அடைத்துவைத்தான்; இத் தருணத்தில் அவன் நம்மை அடைக்கலப் பொருளாகவும் தன்னை ரக்ஷகமாகவுமன்றோ; கருதவேண்டும். அவ்வாறு கருதாமல், நம் அவதாரத்தின் உண்மையறிந்து ஐசுவர்யம் நாசமுடையதால் மோக்ஷங்கொடுவென்றான்; கர்ம ஜ்ஞாநபக்திகள் எனக்கொன்றுமில்லை என்றான்; நிலைநின்ற தருமமாகிய உன்னையே பற்றினேனென்றான்; இவன் சொல் தத்வஜ்ஞாநிகள் சொல்லும் சொல்லாய் மிக வழகியதாயிருக்கிறதென்று தனக்குள் நினைத்துக்கொண்டு மோக்ஷங்கொடுத்தேன் என்னை வெளியில் விடுவாயாக?

ததி:- இந்தத் தயிர்ப்பானை எனக்கு மிகுந்த நாள் உபகாரமாயிருந்ததாலும், மேலும் இப்பொழுது இது உன்னைக் காத்துக்கொடுத்ததினாலும் இப்பானைக்கும் மோக்ஷங்கொடுவென்றான்.

கண்:- அதற்கெவ்வாறு கொடுப்பது;

ததி:- நீ; ராமனுய் அவதரித்தகாலத்து

"புற்பாமுதலாப்புல்லெறும்பாதியொன்றின்றியே
நற்பாலயோத்தியில்வாழும்சராசரமுற்றவும்
நற்பாலுக்குய்த்தனன்............."

என்றபடி உயர்திணைப் பொருளுக்கும், அஃறிணைப்பொருளுக்கும் நற்பதவிதந்தாயன்றே அதுபோல் இப்பானைக்குங் கொடுக்கிற் குறையென்?

கண்:- அக்காலத்து மோக்ஷம்பெறுவதற்கு அதிகாரமாகிய தடைசெய்யாமை அவைகளிடத்திருந்தமையாலும் மேலும் அவைகள் விஷயத்தில் எனக்குப்பிரியம் சென்றதினாலும் அவைகட்குக் கொடுத்தேன்.

ததி:- இந்தத் தயிர்ப்பானையும் நீ மோக்ஷங்கொடுக்கில் யாதொரு தடைசெய்யாது மேலும் எனக்கு இதுவிஷயத்திற் பிரியமிருப்பதால் இதற்குஅவசியம் மோக்ஷங்கொடுக்கவேண்டும்

கண்:- நீ விரும்பியபடி உன் சம்பந்தம் பெற்ற தயிர்ப்பானைக்கும் மோக்ஷங்கொடுத்தேன் என்றான்.

"சிந்திக்கநெஞ்சில்லைநாவில்லைநாமங்கள்செப்பவின்னை
வந்திக்கமெய்யில்லைவந்திருபோதுமொய்மாமலர்ப்பூம்
பந்தித்தடம்புடைசூழரங்காதிபாண்டனுன்னைச்
சந்தித்தநாண்முத்திபெற்றதென்னேதயிர்த்தாழியுமே"

என்றதனாலும் அறிக.

இதனால் ஸர்வேசுவரனுடைய அவதார உண்மையறிந்தவரெவரேனும் அவர் மோக்ஷமடைவர் என்பது தெளிவாயிற்று.

இனி பிருகுமகருஷியின் சாபத்தால் வந்தவதரித்தானென்று சொல்வதின் விஷயத்தை ஆராய்வாம்.

ஒருகாலத்துத் தேவர்கட்கும், அசுரர்கட்கும், கொடிய யுத்தமுண்டாயிற்று. அப்பொழுது தேவர்கள் வெற்றிபெற்றனர். அஞ்ஞான்று அசுரர்கள் பிருகுமகருஷியின் பத்தினியை அடைந்து எங்களைக் காப்பாற்றவேண்டுமென அடைக்கலம்புக; அவள் அவர்கட்கு அடைக்கலம் தந்தாள். இதுகண்ட மஹாவிஷ்ணுவானவர் தேவர்களின் விரோதிகளாகிய கொடிய அசுரர்கட்கு அடைக்கலந்

தந்தாளெனப் பிருகுபத்தினியின்மீது கோபங்கொண்டு அவளைச் சக்கராயுதத்தால் சேதித்தனர். பின் பிருகுமஹருஷி மனைவியைப் பிரிந்த பிரிவாற்ருமையால் வருத்தமுற்றுப் பரிதபிக்கலாஞர். என்னே ஒரு பெண்ணைக்கொல்லுதல் கொடிய பாபச்செயலாம். அதினும் ஒரு மஹருஷியின் பத்தினியைக்கொல்லுதல் மஹாப்பாப மன்றே இவற்றையறியாமல் விஷ்ணுவானவன் நம் பத்தினியைக் கொன்ருனே யெனக்கோபங்கொண்டு அதனல் ஒன்றும் ஆராயா மல், இவ் விஷ்ணுவானவன் பூமியில் மனிதனுய்ப்பிறந்து நம்மைப் போல்மனைவியை யிழந்து பலகாலம் பரிதபிக்கக்கடவனெனச் சபித் தனர். சிறிதுநேரம் சென்றபின்னர் பிருகுமஹருஷியின் உள்ளம் சாந்தமுற்று ஆலோசிக்கத் தொடங்கிஞர். நாம் என்னகார்யஞ் செய்தோம். ஸர்வகாரணனுயும், ஸர்வவல்லவனுயும், எல்லாச் சராசரங்களுள்ளும் புறம்புமாய் நிறைந்து விளங்குகின்றவனுயு முள்ள மஹாவிஷ்ணுவின் பெருமை அறியாமல் சபித்தோம் "அம் மானுழிப்பிரான் அவனெவ்விடத்தான் யாஞர்" என்றபடி அவன் அறப்பெரியோன், நாம் அறச்சிறியோம் நம் சாபம் அவ்வமலனைப் பீடிக்குமாறெங்ஙனம்? மேலும் அவ்வெம்பெருமான் கெட்டகாரி யத்தைச் செய்யவில்லையே மஹாப்பாபிகளாகிய அசுரர்கட்கு அடைக்கலம் கொடுத்தவளாகிய நம் மனைவியைக் கொன்ருர். அது தருமந்தானே அங்ஙனமிருக்க நாம் அவனைச் சபித்தது ஞாயமன்றே எவ்வகையாலும் இச்சாபம் அவ் வமலனைச் சென்று பீடிக்கமாட் டாது. பீடிக்காவிடில்; நாம் பொய் கூறினேமாவோம். பொய் புகன்றதற்குப் பலன் நரகமேயாம். இனி நாம் நரகமடைவதற்கு ஐயமின்று; இதற்கென்செய்வோம் இக்குறை ஒழிய அந் நாதனைச் சரணமடைந்து அறியாது செய்த பிழையை அங்கீகரிக்க வேண்டு மென வேண்டிக்கொள்ளுதலின் மிக்கதோர் உபாயமில்லை யெனத் தபசுசெய்யத் தொடங்கிஞர்.

(தொடரும்.)

இங்ஙனம்,

நியாயவேதாந்த வித்வான்

ஸா. து. ராமாநுஜாசார்யர்,

ஸ்ரீ சரண்யாபிமத விஷ்ணுசித்த ராமாநுஜ ஸபை.

மதுரை.

அரும்பத விளக்கம்.

பக்கம்	வரி	பதம்	உரை
3	15	ஸ்மிருதி	தருமசாஸ்திரம்
,,	ஷை	இதிஹாஸம்	இராமாயணம் பாரதம் முதலியன
8	2	சாதனம்	ஏது
,,	3	சாத்யம்	சாதிக்கத்தக்கது
9	8	வாசிகம்	வாயாற்சொல்லப்படுவது
10	26	அத்வாரகரக்ஷணம்	நேரிற்காப்பாற்றுகை
12	8	சாக்ஷாத்கரித்தல்	ப்ரத்யக்ஷமாயறிதல்
14	9	கருத்திருத்துவம்	செய்வோனுந்தன்மை
,,	13	ரக்ஷணம்	காப்பாற்றுகை
		ரக்ஷ்யம்	காப்பாற்றப்படுவது
15	17	சூசிதம்	குறிக்கப்பட்டது
,,	18	அந்நுவயம்	உடன்பாடு
,,	21	வியதிரேகம்	எதிர்மறை
16	10	ஸ்ரீகோசம்	புஸ்தகம்
14	29	சிஷ்டாசாரஸித்தம்	பெரியோர் ஒழுக்கத்தால் அறியப்பட்டது
15	25	பூருவோத்தரம்	முன்பின்
24	25	பிரவர்த்தி	முயற்சி
		நிவர்த்தி	ஒழிவு

Vol. 1. No. 2. 33

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

விசிஷ்டாத்வைதம்.

ஒரு சித்தாந்தத்திற்கு இட்டு வழங்கும் பெயர் மாத்திரத்தால், அச் சித்தாந்தத்தின் உட்பொருளெல்லாம் அதிலடங்கிக் கிடக்கு மாகில் அது யாவராலும் போற்றப்படுந் தன்மையதாய் விளங்கும். இவ் விசிஷ்டாத்வைதமென்ற சொல் ஸ்ரீ வைஷ்ணவ ஸமயத்தின் உட்பொருளெல்லாந் தன்னிடத்திலமைத்துக் கொண்டிருக்கின்ற தென்பது பின் கூறுமவற்றால் விளங்கும்.

இவ் விசிஷ்டாத்வைதம் என்றசொல் அத்வைதசப்தம்போல் வேதத்திற் கூறப்படவில்லையாதலால் இது வேதஸம்மதமான பெயரன்று என்பார்க்கு "முக்தாநாம்பரமாகதி:" என்ற ஸர்வேசுவரனுக்குரிய ஒருபெயரும், அந்தணாளர் நாடோறும் அநுஷ்டித்து வருவதாகிய க்ரியைக்கு வாசகமாகிய ஸந்தியாவந்தனம் என்ற பெயரும், வேதத்திற் கூறப்படவில்லையாதலால், இவையும்; வேத ஸம்மதமன்றெனக் கொள்ளவேண்டுமெனக் கூறி மறுக்க. இப் பெயர்களெல்லாம் வேதாந்தத்தின் உண்மையறிந்த தத்வ தரிசிகளாகிய பெரியோர்கள் தகுதிநோக்கி இட்டு வழங்கிய பெயர்களெனக் கொள்க. வேதப் பிரமாணத்தைப்போல் வேதார்த்த முணர்ந்த சிஷ்டர்களின் ஆசாரமும் பிரமாணமாம். ஆகையால் இவ் விசிஷ்டாத்வைதமென்ற பெயர் சிஷ்டர்களாலே அங்கீகரிக்கப்பட்டிருப்பது பற்றியும் ஆதரிக்கத்தக்கதே.

விசிஷ்டாத்வைதம் என்பது விசிஷ்டஸ்ய—அத்வைதம் என விரியும் ஆறும்வேற்றுமைத் தொகையாம். விசிஷ்டஸ்ய—உயிர்ப்பொருள் உயிரல் பொருள்களைச் சரீரமாகவுடைய [வஸ்துவின்] அத்வைதம்—இரண்டில்லாமை. அஃதாவது சேதநாசேதநங்களைத் தனக்குச் சரீரமாகவுடைய பிறிதோர் வஸ்து இல்லையென்றபடி. அவயவமுடையதன்றோ சரீரமாகும்; அவ்வாறிருக்க நிரவயவ ஆத்மாமானவையும் ஸர்வேசுவரன் சரீரமாகவுடையவனாயிருக்கின்றானென்பது எவ்வாறு பொருந்துமெனின்? இங்குச் சரீரமென்றது கைகால் முதலிய அவயவங்களோடு கூடியது என்று பொருள் கொள்ளத்தக்கதன்று. நியாம்யமாய் (ஏவத்தக்கது) தார்யமாய்,

(தரிக்கத்தக்கது) சேஷமாய் (அதிசயத்தை விளக்கத்தக்கது) உள்ளதுவதுவோ? அது சரீரமென்று சொல்லவேண்டும்; ஏனெனின்? வேதாந்தத்தில் ஆத்மாவையும், ஸர்வேசுவரன் சரீரமாகவுடையவனாயிருக்கின்றானென்றதினால், அதற்கேற்றபடி சரீரலக்ஷணம் மேற்கூறியபடி அமைத்துக் கொள்ளவேண்டும். மேற்கூறிய லக்ஷணம் ஆத்மாவுக்குமிருப்பதால்; அதையும் ஸர்வேசுவரன் சரீரமாகக் கொள்ளுதற்கு யாதொரு தடையுமின்றெனக் கொள்க.

ஸர்வேசுவரன் சிருஷ்டிக்குமுன் ஸூக்ஷ்மசித சித்துக்களைச் சரீரமாகவும், சிருஷ்டிகாலத்தில் ஸ்தூலசித சித்துக்களைச் சரீரமாகவுங் கொண்டிருக்கின்றானெனக் கொள்க. ஸூக்ஷ்மசித சித்தைச் சரீரமாகவுடைய தசை காரணதசை யெனவும், ஸ்தூலசிதசித்தைச் சரீரமாகவுடைய தசை காரியதசை யெனவும் அறியத்தக்கது. அணுஸ்வரூபனாய் எப்பொழுதும் ஒரேதன்மையுடையனாகிய ஆத்மாவுக்கு ஸ்தூலத்துவம் (பெருத்திருக்குந்தன்மை) எவ்வாறு கூடுமெனின்? இங்கு ஆத்மா ஸ்தூலனாகின்றான் என்றதற்கு ஸூக்ஷ்ம ஸ்வரூபனாகிய ஆத்மா பெருக்கின்றானென்று பொருள் கொள்ளலாகாது. அவனுடைய ஜ்ஞானம் பிரகாசமாகின்றதென்று ஜ்ஞானத்திற்கு ஸ்தூலத்துவங் கொள்ளவேண்டும். அஃதாவது— ஆத்மாவுக்குக் காரணதசையி லடங்கிக்கிடந்த ஜ்ஞானம் காரியதசையில் பிரகாஸமுற்றதென்பதாம்.

காரணதசையில் ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டமான பிர்ம்மமானது-காரியதசையில் ஸ்தூலசிதசித்விசிஷ்ட பிர்ம்மமாய் வருகின்றதென்றால், உபாதாந காரணமாகிய ஸர்வேசுவரனுக்கும் மண்பிண்டத்தைப்போல் சிறுப்பது பெருப்பது என்ற விகாரங்களுண்டாக வேண்டுமே எனின? நிர்விகாரத்வத்தையும், உபாதாநத்வத்தையும் சொல்லுகிற சுருதியின்படி விகாரப்பாடுடைய சேதநா சேதநங்களைத் தனக்குச் சரீரமாகக்கொண்டு தான் விகாரப்படாமலிருக்கின்றானாதலால் சிறுப்பது பெருப்பதாகிய தோஷங்கள் சேதநா சேதனங்கட்கன்றி ஸர்வேஸ்வரனுக்கில்லையென்றுணர்க.

ஸூக்ஷ்மசித சித்விசிஷ்ட பிர்ம்மமென்று சொல்லப்படுகிற காரணமூன்றும் பின் ஸ்தூலசிதசித்விசிஷ்ட பிர்ம்மம் என்று சொல்லப்படுகிற மூன்று காரியங்களாகின்றன. இம்மூன்றுங் காரண காரியங்களாயிருந்து, ஒவ்வொன்றும் ஒவ்வொரு

வேறுபாட்டால் காரண காரியங்களாகின்றன. எவ்வாறெனின், அசேதனம் வடிவால் வேறுபடுகின்றது. ஆத்மா சுபாவத்தால் வேறுபடுகிறது. ஸர்வேசுவரன் இவை இரண்டையுஞ் சரீரமாகக் கொண்டதினால் வேறுபடுகின்றான். இதனால் அசேதனத்திற்கு வடிவு விகாரமும், சேதனத்திற்கு சுபாவ விகாரமும், ஈசுவரனுக்கு இவ்விரண்டுவிகாரமுமின்றி இவற்றைச் சரீரமாகக்கொண்ட வேஷ வேறுபாடுங் கொள்ளவேண்டும்.

பிர்ம்மத்திற்கு ஸூக்ஷ்மசிதசித்வஸ்துக்களைச் சரீரமாக வுடைய நிலைமை வேறுதலால் அவ்வேறுபாடுதோன்ற முற்கூறியது காரணாவஸ்தையென்றும் பிற்கூறியது காரியாவஸ்தை யென்றும், வழங்கப்படும்.

சீதஸ்பரிசமுடைய ஜலத்திற்கு அக்னியோடுகூடிய குடத்தின் சேர்க்கையால், உஷ்ணமும் ஒலியுமுண்டாவதுபோல ஸர்வேசுவரன் சேதனா சேதனங்களைத் தனக்குச் சரீரமாகக்கொண்ட ஸம்பந்தத்தால் அசேதனத்திற்குரிய விகாரமும், அசேதனத்தோடு கூடிய ஆத்மாவுக்குரிய சுக துக்கங்களும், ஸர்வேசுவரனுக்கு உண்டாகவேண்டுமே யெனின்? தேகத்தோடுகூடிய ஆத்மாவுக்குத் தேகத்திற்குரிய பால்ய யௌவனாவஸ்தை (நிலைமை)கள் ஏற்படுவதில்லை, அதுபோல சேதனா சேதனங்கட்குரிய விகார சுக துக்கங்கள் ஸர்வேசுவரனுக்கு ஏற்படுவதில்லை யென்றறிக.

விசிஷ்டாத்வைதம் என்ற சொல்லிற்குச் சேதனாசேதனங்களைச் சரீரமாகவுடையவனது அத்வைதம் என்பது பொருளாதலால் விசிஷ்ட வஸ்துவுக்கு ஸர்வேசுவரத்வம் சொல்லப்பட்டதாகிறது. இதில் சேதனா சேதனங்கள் உடைமையென்பதும் ஸர்வேசுவரன் உடையவனென்பதும் வெளியாயின. உடைமை உடையவனென்ற இரண்டில் உடையவன் சிறந்தவனென்பதை யாவரும் அறிவர். இதனால் பிர்ம்மத்திற்குச் சரீரமாகச் சொல்லப்படுகிற ஜீவாத்ம ஸாமாந்யத்தில் பிர்ம்மாதிகளும் அந்தர்க்கதராகையால் அவர்களைக் காட்டிலும் ஸர்வேசுவரன் சிறந்தவனென்பது பெறப்பட்டது.

(தொடரும்).

நியாயவேதாந்த வித்வான்,

தேசிக வரதாசார்யர், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ:

கைப்பொருள் கொடுத்தும் கற்கை நன்று.

ஞானநூல்கள் ஆத்மாவுக்குப் பிறப் பிரண்டெனக் கூறும் அவையாவன: தேக ஸம்பந்தமான பிறப்பும் ஞான ஸம்பந்தமான பிறப்புமாம். தேக ஸம்பந்தமான பிறப்பாவது:—ஆத்மாக்கள் செய்த புண்ணிய பலங்கட்குத் தகுதியாக அவை தேவ மனுஷ்ய திரியக் ஸ்தாவர சரீரங்களிலே பொருந்துதலாம். ஞான சம்பந்தமான பிறப்பாவது.— ஞான மநுஷ்டானமுடைய நல்ல ஆசார்யனை யடைந்து அவனிடத்தில் ஞான நூல்களை ஐயந்திரிபறக் கற்று அறிவைப் பெறுதலாம். புருஷார்த்தங்களுட் சீரிய தாயுள்ள மோக்ஷமடைய ஞான ஸம்பந்தமான பிறப்பே சாலச்சிறந்ததெனக் கொள்க. தேக ஸம்பந்தமான பிறப்பு தேகமொழிந்தவுடன் ஆத்மாவுக்கு ஒரு பிரயோஜனமின்றிக் கழியும். ஞான ஸம்பந்தமான பிறப்பு.

“ஒருமைக்கட்டான்கற்றகல்வியொருவற்
கெழுமையுமேமாப்புடைத்து”

என்றபடி ஒருவன் ஒருமைக்கண் கற்ற கல்வியானது அவனுயிருடன் சேர்ந்து அது புகுந்தவிடம் புகுந்து எழுபிறப்பினுஞ் சென்று அவனுக்குறுதுணையாய் உபகாரஞ் செய்துவருகிறது.

இதுபற்றியன்றே பாண்டியன் ஆரியப் படைதந்த நெடுஞ் செழியன். இதன் பெருமையும் அவசியமுந் தேன்ற,

“உற்றுழியுதவியுமுறுபொருள்கொடுத்தும்
பிற்றைநிலைமுனியாதுகற்றனன்றே
பிறப்போரன்னவுடன்வயிற்றுள்ளுஞ்
சிறப்பின்பாலாற்றாயுமனந்திரியு
மொருகுடிப்பிறந்தபல்லோருள்ளு
மூத்தோன்வருகவென்னாதவரு
ளறிவுடையோனாறரசுஞ்செல்லும்
வேற்றுமைதெரிந்தநாற்பாலுள்ளுங்
கீழ்ப்பாலொருவன்கற்பின்
மேற்பாலொருவனுமவன்கட்படுமே”. (புறம்......)

என்று கூறினன்.

இச் செய்யுளின் பொருள், ஒரு மாணாக்கன் தன்னாசிரியனுக்கு ஓரிடையூறு வந்தவிடத்து அது தீர்தற்கு வந்துதவியும், மிக்க பொருளைக் கொடுத்தும், வழிபாட்டு நிலைமையை வெறாதுகற்றல் அவற்கு அழகிது. ஏனெனில், ஒரு தாயின்வயிற்றிற் பிறந்தவருள் ஒருவன் கல்வியறிவுடையவனாயிருப்பானாகில், அவனிடத்தில் அத்தாய்க்கு அன்பும், மற்றவனிடத்தில் அன்பில்லாமையு முண்டாகிறது. மேலும் ஒருகுடியிற் பிறந்து வயதால், மூப்பெய்திய பலருள்ளும் அறிவுடையொருவனை உலக மாதரிக்கும்; அவனை அரசனும் விரும்பி, அவன் சென்றவழிச் செல்வான். கற்றுணர்ந்தோன் இழிகுலத்தோனாயினும், மேற்குலத்துளொருவனும் இவன் இழிகுலத்தானென்றாராயாது கல்வியின்பொருட்டு அவனிடத்தே சென்று வழிபடுவான் என்பதாம். இதனால் கல்வி இம்மையிற் புகழையுந் தருமென்பதும், கல்வியறிவுடைய பிறப்பே உயர்வுடையதென்பதும், பெறப்பட்டன. இக் கல்வியை உயிர்க்குக் காவலாக வைத்திருக்கும் மிக்க பொருளையுங் கொடுத்துக் கற்கவேண்டுமென்பதைக் கீழ்க்குறிப்பிடுஞ் சரித்திரத்தாலறிக.

முன்னொருகாலத்தில் ஜாநசுருதி என்ற ஒரு அரசனிருந்தான்; அவன் செங்கோன்மையோடு அரசுசெய்து வந்தானாதால் எவர்க்கும்,

"தாயொக்குமன்பிற் றவமொக்குநலம்பயப்பின்
சேயொக்குமுன்னின்றொருசெல்கதியுய்க்குநீரால்
நோயொக்குமென்னின் மருந்தொக்குநுணங்குகேள்வி
ஆயப்புகுங்காலறிவொக்குமெவர்க்குமன்னன்"

என்றபடி அன்பு செலுத்துதலில் தாயையும் நன்மையைத் தருதலில் தவத்தையும், நற்கதியைக் கொடுத்தலில் புத்திரனையும், அரிய நூல்களை ஆராயப்புகுந்தால் அறிவையும் ஒப்பானவனாய் விளங்கினான். இவன் எல்லாத் தானங்களிலும் சிறந்ததாகிய அன்னதானஞ் செய்வதே தனக்குச் சிறந்த காரியமாக மேற்கொண்டு பல நகரங்களிலும், பல கிராமங்களிலும், பல அன்னசாலைகள் ஏற்படுத்தி எல்லோரையும் ஆராதித்துவந்தான்; இவன் புகழ் எங்கும் பரவியது. ஒருநாள் பல்லர் பல்லாக்ஷரென்ற இரண்டு ருஷிகள் அதிதிகளாய் வந்தார்கள், ஜாநசுருதி அவர்கட்கு வந்தனை வழிபாடுகள்செய்து அன்னதானத்தால் அவர்கள் திருப்தியடையும்படி

செய்தான். பின்னர், பல்லர் பல்லாக்ஷரென்ற இரண்டு ருஷிகளும் அரசனால் திருப்தி செய்யப்பட்டவர்களாய், இவ்வரசன் அன்ன தானத்திற் சிறந்தவனாய் விளங்குகின்றான்; அதிதிகள் பலரையும் நாடோறும் ஆராதித்துவருகின்றான்; எவர்க்கும் நன்மைசெய்வதிற் கருத்துடையவனாயிருக்கின்றான்; இவனுடைய சிந்தையும், செய்கையும், புகழத்தக்கன; இங்ஙனமிருந்தும் ப்ரும்மஜ்ஞானமில்லாதிருக்கின்றான்; ப்ரும்மஜ்ஞானமில்லையேல் அந்தமில் பேரின்பமுடைய மோக்ஷமில்லையென்பது நூல் முடிபன்றோ? என்செய்வது, இனி எவ்வாறாவது இவ்வரசனுக்கு நாம் ப்ரும்மஜ்ஞானத்தையுண்டுபண்ண வேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டு, அவ்விருவரும், ஜாநசுருதி தன் அரண்மனையின் மேன்மாட நிலாமுற்றத்திலிருந்து கொண்டிருக்குங்காலத்தில் பல்லன், "பல்லாக்ஷன் என்ற பெயருடைய இரண்டு அன்னப்பறவைகளாகி அரசனிருக்குமிடத்தின்வழியாகப் பறந்துசென்றனர். அத்தருணத்தில் அவ்வன்னப் பறவைகளுள் ஒன்று மற்றொன்றைப்பார்த்து, "பல்லாக்ஷரே' ஜானசுருதி என்ற அரசன் இதோ இருக்கின்றான்; இவன் நல்ல தார்மிகன்; எல்லா அரசருள்ளும் சிறந்தவனாக மதிக்கப்படுபவன்; இவனுடைய புகழ் நிலங்கடந்து சுவர்க்கத்திலுஞ் சென்று விளங்குகின்றது; ஆதலால் உமது சிறகுகளின் நிழல் இவன்மீதிற் படுமாயின் அவைகள் எரிந்துவிடுமாகையால் ஜாக்கிரதையாய்ச் செல்வீ" றென்றது. அம்மொழியைக்கேட்ட மற்றொன்று "பல்லரே! நீர் இந்த ஜானசுருதியை மிகவும் புகழ்ந்துரைத்தீர்; இவன் அவ்வளவு சிறந்தவனா? எல்லாரினுஞ் சிறந்துவிளங்கும் *ரைக்குவராவனோ? அன்றே; அங்ஙனமிருக்க நம்நிழல் இவன்மீது படுவதால் நமக்கோர் இடையூறும் வராது" என்று உதாசீனமாய்ப் பேசியது; இவ்வுரை கேட்ட பல்லனென்ற அன்னம் அரசனுக்கு ரைக்குவரின் பெருமையை வெளிப்படுத்த வேண்டுமென்ற கருத்தால் மீண்டும் பல்லாக்ஷனை நோக்கிப் "பல்லாக்ஷரே! ரைக்குவரைப்பற்றிப் புகழ்ந்துரைத்தீர்; அவர் இத்தன்மையினரென் றெடுத்துரைப்பீராக" என்

---

* உலகத்தில் அநுஷ்டிதமான கர்மங்களும் ஜ்ஞானங்களும் யாவனொருவனுடைய கர்மஜ்ஞானங்களில்; அந்தர்ப்பூதமாயிருக்கும், அவன் காண் ரைக்குவன்; என்று பெரியவாச்சான் பிள்ளை ஸ்தோத்திரரத்நவ்யாக்யானத்தில் கூறியிருக்கின்றனர்.

றது. பல்லாக்ஷனென்ற அன்னம் "ரைக்குவரின் பெருமையை என்னென்பேன் அவருடைய புகழை என்னாற் புகழலாகுமோ? ஆயினும் இயன்றவரை எடுத்துரைப்பேன்; கேட்பீராக.;

ரைக்குவர் ஒரு பிரும்மஜ்ஞானி; அவருடைய ஜ்ஞானத்திற்கு விளங்காத விஷயம் ஒன்றுமில்லை; எல்லாம் அவருடைய ஜ்ஞானத்தில் அடங்கியிருக்கின்றன; அவரைக் கண்டமாத்திரத்திற் பாபமெல்லாம் தீயிற்பட்ட பஞ்சைப்போலப் பறந்துபோம். அவ்வளவு பெருந்தகையாளர்; அவர் ஒரு வண்டியைத் தமக்கு ஊர்தியாகக் கொண்டிருப்பார்;" என்றது; இவ்வுரையெல்லாம் பல்லன என்ற அன்னம் கேட்டு மகிழ்வுற்றுப் பல்லாக்ஷனுடன்கூடிப் பறந்து சென்றது.

பின்னர் ஜாநசுருதி, அன்னப்பறவை இரண்டும் ஒன்றோடொன்று வினவி உரையாடிக்கொண்டதையும், தன்னை இழித்துக் கூறி, ரைக்குவரைப் புகழ்ந்துபேசியதையும் கேட்டுக் கவலையுற்றுப் படுக்கையிற் போய்ச்சாய்ந்தான், கண்ணுறக்கம் வரவில்லை. பின்வருமாறு தனக்குள் ஆலோசிக்கத் தொடங்கினான்.

பல பிறவிகளுள்ளும் மானிடப் பிறப்படைதல் மிகவும் அரிது; இவ்வரிய பிறப்பைப் பெற்றவன் பிரும்மஜ்ஞானத்தை யடையாதிருந்தால் அம்மைவயிற்றிலும் யமன்கயிற்றிலும் கட்டுண்டுழல்வதாகிய துன்பம் எவ்வாறு நீங்கும்?

"மகிழலகொன்றேபோல்மாறும்பல்யாக்கை
நெகிழமுயர்சிப்பார்க்கல்லால்—முகிழ்விரிந்த
சோதிபோற்றோன்றுசுடர்பொன்நெடுமுடியெம்
ஆதிகாண்பார்க்குமரிது"

என்றபடி சூதுபோர்க் கருவியாகக்கொள்ளும் மகிழ விதையானது கோடிஸ்தானத்திலும் நின்று காணிஸ்தானத்திலும் நிற்பதுபோல் இவ்வாத்மாவானது தேவசரீரத்திலே புகுவதும் விலங்குடலிலே புகுவதுமாக இவ்வாறு மாறிமாறிப்பல சரீரங்களிற் புக்குழன்று திரிகின்றது. இச்சரீர சம்பந்தத்தை நீக்கவேண்டுமென்று முயற்சி செய்வார்க்கன்றி ஜகத்காரணமாய் விளங்குகின்ற ஸர்வேசுவரனைக் காணுதல் அரிதென்று சொல்லப்பட்டுளதே; நாம் இவ்வளவு காலமாக இவ்விஷயத்தை ஆராயாமல் தான தருமங்களைக் காட்டிலுஞ் சிறந்ததொன்றில்லையென்று நினைத்து வீணாகக் காலத்தைக்

கழித்துவிட்டோமே; இனியாவது பிரும்மஜ்ஞானத்தைக் கைப் பற்றவேண்டுமென எண்ணிப் பொழுதுவிடிதலை, எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். விடிவேளை வந்தவுடன் சாரதியானவன் ஜாநசுருதியிருக்கும் அரண்மனை வாயிலையடைந்து "வேந்தர் வேந்தே! நீடூழி வாழ்க.

"நெல்லுமுயிரன்றே நீருமுயிரன்றே
மன்னவனுயிர்த்தே மலர்தலையுலகம்"

என்றபடி நீர் உலகிற்குயிரன்றோ! நும்மிற் சிறந்தவர் இந் நிலவுலகி லுண்டோ! நீவிர்செய்யும் அன்னதானத்தால் ருஷிகள் முனிவர் முதலானோர்கள் உகந்து உம்மைத் துதிசெய்யாதாருண்டோ! நீர் மிகவும் தருமத்திற் சிறந்து விளங்குகின்றீர்! நும் புகழ் இவ் வுலகையும் கடந்துவிட்டது!" என்று பலவகையாகப் புகழ்ந்து பேசினான்.

இவ்வுரை அனைத்தும் ஜாநசுருதியின் செவியிற் பட்டவுடன் துக்கங்கொண்டு அவன் சாரதியை நோக்கிச் "சாரதி! இப்பொழு தென்னைப் புகழ்ந்து கூறியதுபோல் இனிப் புகழ்ந்து கூறுதொழி வாய் இப் புகழுரையெல்லாம் எனக்குத் தகாது. ரைக்குவரென்ற பிரும்மஜ்ஞானிதான் யாவராலுந் துதிக்கப்படுந் தன்மையினராவ" ரென்றான். சாரதி, அரசன் இன்று துக்கமுடையவனாய்க் காணப் படுகின்றான் மேலும், ரைக்குவரென்ற பிரும்மஜ்ஞானியைக்கண்டு அவரிடத்தில் உபதேசம் பெறவேண்டுமென அவாவுடையவனாயும் இருக்கின்றானெனக் குறிப்பாலறிந்தான். பின் அரசனிடம் விடை பெற்றுச்சென்று பல நகரங்களிலும் கிராமங்களிலும் ரைக்குவ ரைத் துருவித்தேடினான். ஓரிடத்திலும் இவன் கண்ணிற்கு அவர் புலப்படவில்லை. மீண்டுவந்து அரசனையடைந்து "அரச! யான் எல்லா நாடு நகரங்களிலும் சென்று பார்த்தவிடத்தும் ரைக்குவர் என் கண்ணிற்குப் புலப்படவில்லை" என்றான். ஜாநசுருதி, "சாரதி! நீ என்னகாரியம் செய்தனை, ரைக்குவர் என்பவர் ஜனசஞ்சார மில்லாத நிர்மலமுடைய ஏகாந்தமான இடத்திலிருந்து பிரும்மத் தைத் தியானித்துக் கொண்டிருக்கும் பிரும்மஜ்ஞானியன்றோ? அவரை நீ நாடு நகரங்களிற் சென்றுதேடினால் உன் கண்ணிற்குப் புலப்படுவரா? அவர்ஒருவண்டியைத் தமக்கு ஊர்தியாகப்பெற்றிரு ப்பராம். இனி நீ ஜனசஞ்சாரமில்லாத பலவிடங்களிலுஞ் சென்று

மேற்கூறிய அடையாளத்தோடுகூடிய ரைக்குவரைப் பார்த்து வரக் கடவாய்'' என்று கட்டளையிட்டான். சாரதி அவ்வாறே ஜனசஞ்சாரமில்லாத பல இடங்களிலுந் தேடி ஓரிடத்தில் அரசன்கூறிய அடையாளத்தோடு ஒரு வண்டியில் சரீரமெங்கும் சிரங்கும் சொரியுமுள்ள ஒருவர் இருக்கக்கண்டு இவர் ரைக்குவராய் யிருக்கவேண்டுமெனக் கருதி அருகிற்சென்று சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து "நீர்யா" ரென வினவினன். அதற்கு அவர் "நான் ரைக்குவ" னென்றார். சாரதி மகிழ்ச்சிகொண்டு விரைவில் அரச னிடத்தில் வந்து ரைக்குவர் இன்னஇடத்தில் இருக்கின்றாரென அறிவித்தான்.

பின்னர் ஜாநசுருதி ஆனந்தக்கடலில் ஆழ்ந்தனன். இனி நாம் தாமதிக்காது விரைவில் ரைக்குவரையடைந்து பிரும்மோபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனக்கருதி, அறுநூறு பசுமாடுகளையும் மிகுந்தபொன்னையும் கைப்பற்றிக்கொண்டு ரைக்குவரிருக்குமிடம் வந்து தான்கொண்டுவந்த பசுக்களையும் பொன்னையும் சம்பாவனை யாகச் சமர்ப்பித்து ரைக்குவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, "தேவரீர் எந்தத் தேவதையை உபாயமாக நினைத்து உபாஸிக்கின் றீரோ? அதை அடியேனுக்குபதேசித்தருள்வேண்டு"மென்றான்.

ரைக்—"நீ யார்? மிகவும் சோகமுற்றவனாய்க் காணப்படுகின்றாய்".

அர—"அடியேன் ஜாநசுருதியென்னும் பெயரையுடைய ஒரு அரசன்",

ரைக்—வழிபாடு செய்யாதவர்கட்குப் பிரும்மோபதேசம் செய்ய லாகாதென்று சாஸ்திரம் கூறுகின்றதனால் நீ எமக்குச் சில காலம் தொண்டுசெய்யவேண்டும், அதன்பிறகு உனது நிலைமையைப் பரிசோதித்துக்கொண்டு உபதேசிக்கின்றேன்

அர—அடியேன் தேவரீருக்குச் சிலகாலம் தொண்டுசெய்வே னாகில் என்னாடு அராஜகமாயொழிவதோடு குடிகள் ஒருவர்க்கொருவர், யான் பெரியன், நீ சிறியை என வழக் கிட்டுப் பழிவிளைத்துக் கொள்வார்கள். அப்பழிகட்கெல் லாம் காரணம் யானேயாகின்றேனாதலால், என் மன மஞ்சித் தொண்டுசெய்யும் விஷயத்தைத் தவிர்க்கிறது.

ரைக்— அங்ஙனமானால் எம்மால் பிரும்மோபதேசம் செய்ய முடியாது. நிற்க, நாம் உபதேசிக்கும் பிரும்மோபதேசத்திற்கு நீ, இங்கு வைத்திருக்கும் பொருள் தகுதியுடையனவல்ல, இவற்றை நீயே கைப்பற்றிச் செல்வாய். இனி நீ இங்கிருப்பதற்கும் தகுதியுடையவனில்லை விரைவில் இவ்விடம் விட்டுப் பெயர்வாய்.

அர— ஸ்வாமி இதற்குமுன் யான்பிறந்த பிறவிகட்கோரளவின்று. அவ்வப் பிறவிகடோறும் உண்மையறிவில்லாதுழன்று போந்தேன். இச்சன்மத்தில் தேவரீருடைய கடாக்ஷத்தால் செல்வம் யாக்கை முதலியவற்றில் நிலையாமையான புத்தி பிறந்து உமது திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றினேன்; இது சத்யம்; ஆதலால் அடியேனை மேன்மேலும் பரீக்ஷிக்க வேண்டுமெனக் கருதாது விரைவில் பிரும்மோபதேசம் செய்தருளவேண்டும்.

ரைக்— (ஜானசுருதியைப் பரிசோதிக்க எண்ணி) அரச! உன்னுடைய ராஜஸம்பத்தனைத்தும் எமக்குச்சம்பாவனையாகக் கொடுப்பதற்கு உடன்படுவையானால் உபதேசிக்கின்றோம்.

அரசன் அதற்கு உடன்பட்டுத் தன் அரண்மனையையடைந்து

''கூத்தாட்டவைக்குழாத்தற்றேபெருஞ்செல்வம்
போக்குமதுவிளிந்தற்று''

என்றபடி ஒருவற்குச் செல்வம் வருதல் கூத்தாடுகின்ற இடத்தில் காண்போரின் கூட்டம் வந்தாற்போல நல்வினைப்பயனால் வந்து சேரும். அச் செல்வத்தினுடைய போக்கும், அக் கூத்தாட்டு முடிந்தவிடத்து அக்கூட்டம் நீங்கினாற்போல்வது. நல்வினையில்லாவிடத்து அது தானேயொழியும். இச் செல்வம், ஆத்மாவுக்குத் துணையாயிருப்பதன்று. பிரும்மஜ்ஞானந்தான் ஆத்மாவுக்குறு துணையாயிருப்பதொன்றுமென ஐசுவரியத்தில் வெறுப்பும், பிரும்மஜ்ஞானத்தைப் பெறும்விஷயத்தில் விருப்புமுடையவனாய்த் தன்னிடத்துள்ள எல்லா ஐசுவரியங்களையும் கொண்டுபோய் ரைக்குவரிடத்தில் வைத்து ஸ்வாமி தேவரீர் நியமித்தபடி அடியேனுடைய

எல்லாச் செல்வத்தையும் இதோ ஸமர்ப்பித்துவிட்டேன். இனி யாவது தாமதிக்காமல் பிரும்மோபதேசம் செய்யவேண்டுமெனப் பிரார்த்தித்தான். ரைக்குவர் ஜாநசுருதியின் வைராக்கிய சிந்தையை நோக்கி அன்போடு பிரும்மோபதேசஞ் செய்தனர்.

இதனால், உயிர்க் குறுதுணையாயிருக்கின்ற கல்வியைக் கைப் பொருள் கொடுத்துங் கற்கவேண்டுமென்பது வெளியாயிற்று.

ப. — அ.

ஸ்ரீ:

அவதார ரஹஸ்யம்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸர்வேசுவரன் தன்பால் அன்புபாராட்டுமவர்கட்கு இரங்கு மவனாதலால், இப் பிருகுமகருஷி வெயினிலேநிற்றல் மாரியிலும் பனியிலும் நீர்நிலைநிற்றல் முதலிய செயலை மேற்கொண்டு பின்,

*"இளைப்பினையியக்கம்நீக்கியிருந்துமுன்னிமையைக்கூட்டி
அளப்பிலைம்புலனடக்கியன்பவர்கண்ணேவைத்து
துளக்கமில்சிந்தைசெய்துதோன்றலுஞ்சுடர்விட்டாங்கே
விளக்கினைவிதியிற்காண்பார்மெய்ம்மையேகாண்கிற்பாரே".

என்றபடியே யோகாப்பியாஸத்தால் புலனடக்கிப் பக்தி புரிகின் றமைக்கு ஸர்வேசுவரன் மகிழ்வுற்றுப் பிரத்யக்ஷமாயினர். அப் பொழுது பிருகுமஹருஷி,

"சண்டவான்கிரணவாளாற்றயங்கிருட்காடுசாய்க்கு
மண்டலத்துறையுஞ்சோதிவள்ளலேமறையின்வாழ்வே
பண்டைநான்முகனேயாதிசராசரத்துள்ளபள்ளப்
புண்டரீகத்துள்வைகும்புராதனபோற்றிபோற்றி".

---

* கிலேசங்களின் சஞ்சாரத்தைத் தவிர்த்து ஓராஸநத்தில் இருந்து மேல்இமையைக் கீழ் இமையோடே சேர்த்து அடங்காத இந் திரியங்களையடக்கி (ஆத்மவிஷயமாக்கி) அந்த ஸர்வேசுவரன் விஷயத் தில் விடுதலில்லாத ஸ்மிருதி ரூபமான பக்தியைப் பண்ணி அந்த நிலை மையிற் சுடர்விட்டுத் தோன்றுகின்ற ஜ்ஞானத்தால் ஜ்யோதிஸ்வரூப னைச் சொல்லப்படுமவனை சாஸ்திரங்களில் விதித்தபடியே உபாஸித்துக் காணுமவர்கள் நிலைநின்ற தர்மமான அவனைக் காணுவார்கள்.

என்று துதித்தார். பின் ஸர்வேசுவரன் என்னை நீர் விரும்பித் தவம்புரிந்தமைக்குக் காரணம் யாதென வினவினன். அதற்குப் பிருகுமஹருஷி அருட்பெருங் கடலே! நீர் அசுரர்கட்கு அடைக்கலந் தந்தவளாகிய அடியேனுடைய மனைவியைச் சிரச்சேதஞ் செய்தீரென்று தேவரீருடைய பெருமையறியாமல், உம்மை மனுஷ்யனாய்ப் பிறந்து மனைவியை, இழந்து பலகாலம் வருந்தக்கடவீரென்று சபித்தேன்.

அச்சாபம் ஸர்வேசுவரனான தேவரீரிடத்துச் செல்லமாட்டாமையால் சூனியப்பேய்போல மீண்டுவந்து என்னையே துன்புறுத்துகிறது. "தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்—றன்னையே கொல்லுஞ்சினம்" என்னும் ,முதுமொழிக்கு இலக்காகிவிடும். சாபசக்தியும் ஒரு தவப்பேறென்னலாமோ? வீணான தவஞ்செய்து கேட்டை விளைவித்துக்கொண்டேனே! இதற்கு வேறொரு பரிகாரமுமில்லையே! "தருதுயரம் தடாயேலுன்சரணல்லால் சரணில்லை" என்று தெண்டனிட்டு விண்ணப்பித்தனர். அப்போது பரமதயாளுவான பகவான் திருவுள்ளமுவந்து நான் ஸ்வேச்சையாக தர்மஸம்ஸ்தாபநார்த்தம் அவதரிக்கும் அவதார கார்யங்களில் மஹருஷிகளின் சாபங்களை வாய்மையாக்கப் போகிறேன். ஆதலால், நீரிதற்கு அஞ்சவேண்டாமென்று அநுக்கிரகித்து அந்தர்த்தானமானார். பின்பு பகவான் பிருகுமஹருஷிக்கு வாக்களித்தபடி தசரதனுக்குப் புதல்வனாக அவதரித்துச் சீதாபிராட்டியை விட்டு பலகாலம் பிரிந்திருந்தனர். இச் சரித்திரத்தை உத்தரராமாயணத்தில் பரக்கக் காணலாம். இதனால், சர்வேசுவரன் சாபத்தால் நலிவுற்றுப் பிறந்தானில்லை யென்பதும், மஹருஷிகளின் சாபத்திற்கோர் மதிப்புண்டுபண்ண வந்தவதரித்தானென்பதும், அதுவும் தனது இச்சையென்பதும், கர்ம வசத்தால் வந்து அவதரித்தானில்லையென்பதும் விளங்குகின்றன.

ஸர்வேசுவரன் கர்மத்தாலன்றித் தனதிச்சையால் வந்தவதரிக்கின்றானென்றாலும் பிறக்கின்றான் என்றதனால், ஒரு தாயின் வயிற்றிற் கட்டுண்டு அதனாலுண்டாகிய துன்பத்தை அநுபவித்ததாக வேண்டுமன்றோ? அதற்கேற்ப கௌசலையாரும், தேவகியாரும், ஸர்வேசுவரனைப் பத்துத் திங்களும் பன்னிரு திங்களுந் திருவயிறு வாய்க்கப் பெற்றிருந்தார்களென்று கூறப்பட்டிருப்பதால், ஸர்வேசுவரன் கற்பத்திற் கட்டுண்டு துன்பமுற்றானென்பது வெளிப்படை. அங்ஙனமிருக்க ஸர்வேசுவரனை, நித்யானந்த ஸ்வரூபனென்று எவ்வாறு கூறுவதெனின்? கூறுதும்.

"ஆதியஞ்சோதியுருவை யங்குவைத்திங்குப் பிறந்த" என்று சொல்லப்பட்டிருப்பதால், ஸர்வேசுவரன் பரமபதத்திலிருந்த வண்ணம் தன் அசாதாரண விக்ரஹத்தோடு இங்கு வந்தவதரிக்கின்ற காலத்துத் தன் சக்தியால் கர்ப்பஸம்பந்தமில்லாமல் வந்து அவதரிக்கின்றானென்பது பெறப்படும். இதற்குத் திருஷ்டாந்தமாகச் சில சரித்திரம் கூறி விளக்குவாம்.

இக்ஷ்வாகு வம்சத்திற்றோன்றினவனாகிய யுவனாசுவனென்பவன், சிறியதைப் பெரியது நலியாமல், புலியும் புல்வாயும், ஒரு துறையுள் நீருண்ணும்படி செங்கோல் செலுத்தி வந்தான். இவனுக்கு நூறுமனைவியர் இருந்தனர். ஒருத்திக்கேனும் புத்திரப் பேறில்லை. அதனால் அரசன்,

"படைப்புப்பலபடைத்துப்பலரோடுண்ணு
முடைப்பெருஞ்செல்வராயினுமிடைப்படக்
குறுகுறுநடந்துசிறுகைநீட்டி
யிட்டுந்தொட்டுங்கவ்வியுந்துழந்து
நெய்யுடையடிசின்மெய்படவிதிர்த்து
மயக்குறுமக்களையில்லோர்க்குப்
பயக்குறையில்லைத்தாம்வாழுநாளே"

மிகுந்த செல்வத்தை யுடையவரானாலும், அறிவை இன்பத்தால் மயக்கும் புதல்வரை இல்லாதார்க்குத்தாம் ஜீவிக்கின்றகாலம் பிரயோஜனமற்றதாயொழியும் என்று சொல்லப்பட்டுளதே. நாம், புத்திரப்பேற்றையடையாமல் மிகுந்த ஐஸ்வர்யத்தைப் பெற்றிருந்தும் பிரயோஜனம் என்? என்று கவலையுற்றுப் புத்திரப்பேற்றின் நிமித்தமாய்ப் பலதருமங்களைச்செய்தான். அவற்றாலும் பயனற்றதாயொழிய இனிச் செய்வதென்னென்று ஆலோசித்து அரசன் தன் நூறு மனைவியரையுங் கூட்டிக்கொண்டு தபோவனஞ் சூழலைக் கிட்டி அங்குள்ள ருஷிகளைக் கண்டு நமஸ்கரித்துத் தனக்குள்ள குறையை அறிவித்தான். அந்த ருஷிகள் யுவனாசுவன்மீது அருள் கொண்டு புத்திரப்பேற்றைத் தருவதான, இந்திரயாகத்தைச் செய்யத் தொடங்கினர். யாகம் நடைபெற்று வருகிற காலத்தில் ஒரு நாள் இராத்திரியில், யுவனாசுவனுக்குத் தாகவிடாய் அதிகரித்தது. அத் தருணத்தில் ஒருவாற்றானும் விடாயகற்றுதற்கேதுவில்லாதொழிய யுவனாசுவன் யாகசாலையிற் புகுந்து கும்பத்திலபிமந்திரித்து வைத்திருந்த ஜலத்தை யெடுத்துப் பானம் பண்ணினான்.

பின் காலையில் எழுந்த ருஷிகள் யாகசாலையிற் பிரவேசித்துப் பார்க்கையில் கும்பத்தில் அபிமந்திரித்து வைத்த ஜலம் அதில் இல்லாதிருக்கக் கண்டனர். இஃதென்னகொல் இக்கும்பத்தி லுள்ள ஜலம் எங்குற்றது? இதைத் தெய்வந்தான் உட்கொண்டதோ? அன்றி, பகைவர்கள்தான் உட்புகுந்து கவிழ்த்துக் கொட்டினரோ? வேறு யாதோ? ஒன்றுந்தெரியவில்லையே எனத் தமது யோக திருஷ்டியால் ஆராயத்தொடங்கினர் அப்பொழுது

"கரந்தசில்லிடந்தொறுமிடந்திகழ்பொருடொறும்"
கரந்தெங்கும்பரந்துள"

ளாகிய ஸர்வேசுவரன் யுவனாசுவனுடைய உள்ளத்திலிருந்து ஏவியதனால் அவன் அந்த ஜலத்தைப் பானம் செய்தான். இதனால், ஒரு நன்மை விளையுமென அவர்களுடைய அறிவுக்கு விளங்கியது. இனித் தெய்வத்தால் நடக்குங்காரியம் யாதோவென எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். பின் யுவனாசுவனுடைய வயிறு நாளுக்கு நாள் பெருத்துக்கொண்டே வந்தது. இதுகண்ட எல்லோரும் எவ்வாறாய்முடியுமோவெனக் கவலையுற்றிருந்தனர். யுவனாசுவனுக்குப் பிரஸவகாலங் கிட்டியது. அப்பொழுது அவனுடைய வலதுபக்க வயிற்றைப் பேதித்துக்கொண்டு சக்கரவர்த்திகட்குரிய அங்கங்களோடுகூடிய ஒரு ஆண்மகவு தோன்றியது. இதுவரையுங் கண்டறியாத இவ்வாச்சர்யத்தைக்கண்டு அனைவரும் ஆநந்தக் கடலில் ஆழ்ந்தனர். பிறந்த குழந்தை பசியின் மிகுதியால் அழத் தொடங்கியது. அதைக்கண்ட ருஷிகள் இக் குழந்தை எதைப் பானஞ்செய்து தன் பசியை ஆற்றிக்கொள்ளப்போகிறதோ? என்று வருத்தமுற்றிருந்தனர். அக்காலத்தில் இந்திரன் தோன்றி இம் மகவு என்னைப் பானஞ்செய்யப் போகிறதென்று கூறித் தன் கட்டை விரலை, அச்சிசுவின் வாயில், வைத்தான். அம்மகவு அக்கட்டை விரலிலுண்டாகிய அமிர்தத்தைப் பானஞ்செய்து சுகமாகவிருந்தது. அன்றுதொட்டு அம் மகவுக்கு மாந்தாதா (என்னைப் பானஞ் செய்கிறவன்) என்ற காரணப்பெயர் வழங்கலாயிற்று. பின்னர் இந்திரன் மாந்தாதாவுக்குத் திரஸ்ததஸ்து [வஞ்சனையுடைய ராக்ஷதர்களைப் பயமுறச் செய்கிறவன்] என்னும் பெயருஞ்சூட்டி நன்கு வாழ்வாயாகவென ஆசீர்வதித்துஞ் சென்றான். பின் மாந்தாதா மிக்க வலிமையுடையவனாய்ச் சப்த தீபங்களோடுகூடிய இந்தப் பூமண்ட

லத்தைத் தானொருவனாயிருந்து, பரிபாலனஞ்செய்துவந்தான்; ஸர்வேசுவரனையும் நாடோறும் ஆராதித்துவந்தான்; அவ்விறைவன் அநுக்கிரஹத்தால், புருகுசனையும், அம்பரீஷனையும், முசுகுந்த யோகியையும், ஐம்பது குமாரிகளையும், பெற்றெடுத்து இனிது வாழ்ந்திருந்தான்.

மஹத தேசாதிபதியான ப்ருஹத்ரதன் என்னும் அரசன் சண்டகௌசிக முனியின் அநுக்கிரஹத்தாற் பெற்ற ஒரு மாங்கனியைத் தன் மனைவியரிருவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தான். அவர்கள் அதையுண்டு கர்ப்பமுற்று ஒருத்தி வலதுபக்கச் சரீரத்தையும், மற்றொருத்தி இடதுபக்கச் சரீரத்தையும் பெற்றனர். இதுகண்ட அரசன் இருகூறாகப் பிறந்த சரீரத்தை நகர்ப்புறத்தே எறிந்துவிடும்படி கட்டளையிட்டான். அதன்படி அவற்றை நகர்ப்புறத் தெறிந்தனர். அப்பொழுது ஜரை யென்ற கிராமதேவதை அவ் விருகூறாய்க்கிடந்த சரீரத்தை யெடுத்து, ஒன்றாகச் சேர்த்தது. உடனே அவ்விருகூறுமிசைந்து குழந்தை வடிவோடு விளங்கியது. அக் குழந்தையை அத்தேவதை அரசனிடங் கொடுத்து மீண்டது. பின் அக்குழந்தை ஜரை என்ற தேவதையால், சேர்க்கப்பட்டபடியால் அதற்கு ஜராசந்தனென்னுங் காரணப் பெயர் வாய்க்கப்பெற்றது. இச் சராசந்தன் பதினாயிரம் யானைப் பலமுடையவனாய் விளங்கினான்.

மேற்கூறப்பட்ட இரண்டு சரித்திரங்களால் மந்திரஜலமானது ஒரு புருஷன் வயிற்றிற்சென்று குழந்தை வடிவுற்றதும் ஒரு முனிவர் அநுக்ரஹித்துத் தந்த ஒரு மாங்கனியானது இரண்டு பெண்கள் வயிற்றிற்புகுந்து குழந்தைவடிவு அடைந்ததும் உரைக்கப்பட்டன. மந்திரஜலத்திற்கும் மாங்கனிக்கும் இவ்வளவு சக்தியிருக்குமாகில் ஸர்வசக்தியான ஸர்வேசுவரன் கர்ப்பசம்பந்தமில்லாமல் வந்து பிறக்கின்றானென்பது மிகையாகாது.

நியாயவேதாந்த வித்வான்,
ஸாது ராமாநுஜாசார்யர்,
ஸ்ரீ சரண்யாபிமத விஷ்ணுசித்த ராமாநுஜ ஸபை,
மதுரை.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

வேதாந்த தத்வவிளக்க வினாவிடை.

குறிப்பு.

* இவ் விஷயம் தத்வவிஷயத்தை ஆராயப்புகுவார் பலர்க்கும், பெரிதும் பயன்படுமெனக் கருதி, வானமாமலையில், ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யோபய வேதாந்த ப்ரதிஷ்டாபநாசார்யரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீமாந் பட்டர்பிரான் ஜீயர்ஸ்வாமிகளின் திருவடிகளை யாச்ரயித்து, அவர் நியமனப்படி உபய வேதாந்தங்களில் பரிபூர்ணஜ்ஞானமுடைய தத்வதரிசிகள் பலரிடத்திலும், தத்வார்த்தங்களைக் கேட்ட ஸ்ரீமாந் முதலியாண்டான் தாஸரால் எழுதிவைக்கப்பட்ட கைப்பிரிதி புஸ்தகத்தின்படி அவர் குமாரர் சீதாபதி ராமாநுஜதாசரநுமதியின்பேரில் வெளியிடப்படுகிறது.

தத்வஹித புருஷார்த்தங்களை ஐயந்திரிபற அறிந்து அநுஷ்டித்து உஜ்ஜீவிக்கவேண்டுமென்ற அபேக்ஷையையும் (௧) சமதமாதி குணங்களையுமுடைய ஸச்சிஷ்யன் வேத வேதாந்தங்களை நன்குணர்ந்தவனாய் ப்ருஹ்மநிஷ்டனாயிருக்கிற சதாசாரியனை யடைந்து கேட்ட வினாக்களையும், அதற்கு அவ்வாசாரியனருளிச்செய்த விடைகளையும், இதனடியில் வருமாறுகாண்க.

வினா:—(௨) சுபாவவாதிகள் ஜகத்து ஸர்வேசுவரன் உண்டாக்கினதென்று கொள்ளாமல் தன்னடைவே உண்டானதென்று சொல்வதற்குச் சமாதானமென்னை?

விடை:—(௩) ப்ரஹ்மாத்மகமான ஜலம், கோமயம், (சாணம்) முதலிய (௪) பஞ்சீகரணோபதானத்ரவ்யங்களில் கர்மாநுகுணமாக

---

(௧) சமம்—(மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற) புறக்கரணங்களை அடக்குதல்.

தமம்—(மனம் முதலிய) அகக் கரணங்களை அடக்குதல்.

(௨) சுபாவ வாதிகள், இயற்கைவாதிகள்; அவராவார் இந்த ஜகத்தானது தன்னடைவே தோன்றிற்றேயன்றி இதற்கு ஒரு கர்த்தா இல்லை என்று வழக்கிடுகின்றவர்.

(௩) ப்ரஹ்மாத்மகம்—பிரும்மஸ்வரூபம்.

(௪) அடுத்துவரும் விஷயத்தினாலுணர்க.

(ஞ) அந்தர்ப்பவித்திருக்கும் ஆத்மாக்களுக்கு எங்கும் நிறைந்திருக்கிற ஸர்வேசுவரன் உண்டாக்கும் சரீரங்களை அவனுண்டாக்கினதாகக் கொள்ளாமல் தன்னடைவே உண்டானதாகச் சொல்வது சரியன்று. ஏனெனில் காதுக்குப் புலப்படுகிற ஒலி மற்றை இந்திரியங்களுக்குப் புலப்படாததைப் போலும்; த்வக்கு இந்திரியத்திற்கு புலப்படுகிற ஜலம், அக்நி முதலியவைகளிலிருக்கும் குளிர்ச்சி, உஷ்ணம் முதலிய ஸ்பரிசங்கள் மற்ற இந்திரியங்களுக்குப் புலப்படாததுபோலும்; கண்ணுக்குப் புலப்படுகிற உருவங்கள் மற்ற இந்திரியங்களுக்குப் புலப்படாததைப் போலும்; நாவுக்குப் புலப்படுகிற பதார்த்தங்களிலுள்ள அறுசுவைகள் மற்ற இந்திரியங்களுக்கு விளங்காததைப் போலும்; மூக்குக்குப் புலப்படுகிற பதார்த்தங்களிலுள்ள வாசனைகள் மற்ற இந்திரியங்களுக்குத் தோன்றாததைப் போலும்; (சு) அஷ்டாங்க யோகத்தால் மனோமலினங்களற்று மிகவும் பரிசுத்தமாயிருக்கிற மனதுடையவர்களின் உண்மையறிவுக்குத் தேகேந்திரிய முதலியவைகளைக் காட்டிலும் விலக்ஷணமாயிருக்கிற ஆத்மாவும், அதனினும் சிறப்புடையவனாய் மனோவாக்குக் காயங்களுக்கு எட்டப்படாதவனாயிருக்கிற பரமாத்மாவும், புலப்படுமேயன்றி, பாஹ்யேந்திரியங்களுக்குப் புலப்படமாட்டா. அப்படியிருப்பதை யறியாமல், கண்ணுக்குப் புலப்படாத ஈசுவரனை இல்லையென்று சொல்லுகிறவர்கள், குயவனையொழிய, மண் தண்டம், சக்கரம் முதலியவைகளையும், சேணியனையொழிய நூல், வேமா, நாடா முதலியவைகளையும், தச்சனையொழிய மரம் வாச்சி முதலியவைகளையும், ஓரிடத்தில்வைத்து, அவை குடமாயும், வஸ்திரமாயும், பெட்டியாயும், தன்னடைவே உண்டாவதில்லாமையாலும், அவை, நிமித்த காரணங்களான சேதநர்களில்லாம லுண்டாகாமையாலும், அசித்து தன்னடைவே ஜகத்தாய்ப் பரிணமிக்கிறதென்று சொல்லச் சரிப்படாது.

அன்றியும், நம்முடைய தேகத்தை நம்முடைய தாய் தந்தையர்கள் உண்டாக்கினதாய்ச் சொல்லப் பார்த்தால் தாய் தந்தையர்கள் தாங்கள் விரும்பியபடியே பெண்ணையேனும், ஆணையேனும், உற்பத்திசெய்ய அவர்களாலும், பிறராலும், முடியாமையாலும், தேகத்தைத் தாய் தந்தையர்கள் உண்டாக்கினார்க

அந்தர்ப்பவித்திருத்தலாவது—உள்ளடங்கியிருப்பதாம்.
(சு) அஷ்டாங்கயோகமென்றதலைக் குறிப்பிட்ட விஷயத்தாலறிக.

ளென்று சொல்ல இயலாது. ஜகத்ரூப கார்யத்தில் அஜ்ஞத்வ (அறியாமை) அசக்தித்வ (சக்தியில்லாமை) துக்கித்துவங்களுடைய சேதனங்களும் காரணமாகமாட்டார்கள். ஆகையால் சர்வஜ்ஞத்வ (எல்லாமறிதல்) சர்வசக்தித்வாதிகளுடையவனாய் நிரதிசயாநந்தனாயிருக்கிற எங்கும் நிறைந்திருப்பவனாகிய சர்வேசுவரனை ஒத்துக்கொண்டு அண்டங்களையும் அண்டங்கட்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களையும் அவன் உண்டாக்கினதாகவே கொள்ளல் வேண்டும்.

[தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

அஷ்டாங்க யோகம்.

யோகமானது நின்றவா நில்லா நெஞ்சை ஒருநிலையில் நிறுத்தி குறித்தபகவத் விஷயத்திற் செலுத்துவதற்கோர் முக்கிய சாதனமாயிருப்பதாம். இதன் பெருமையையும், லக்ஷணங்களையும், பதஞ்சலி பகவான் "பாதஞ்சலி யோக சாஸ்திரம்" என்ற நூலில் விரிவாக அருளிச் செய்திருக்கின்றனர்.

"செயற்கரியசெய்வார்பெரியர்சிறியர்
செயற்கரியசெய்கலாதார்"

என்ற குறளிற்குப் பரிமேலழகர் "செயற்கெளியவாவன மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழிகளாற் புலன்களிற் செலுத்துதலும், வெஃகலும் வெகுடலும், முதலாயின. செயற்கரியவாவன இயமம், நியமம், முதலாய எண்வகை யோக வுறுப்புக்கள்" என்று விசேடவுரையிற் கூறியவாற்றானும் அஷ்டாங்க யோகத்தின் பெருமையை அறியலாம்.

அஷ்டாங்க யோகமாவன (1) இயமம் (2) நியமம் (3) ஆசனம் (4) ப்ராணாயாமம் (5) ப்ரத்யாஹாரம் (6) தாரணை (7) த்யாநம் (8) ஸமாதி என்பனவாம். இவற்றுள் இயமமாவது—கொல்லாமை, மெய்கூறல், திருடாமை, பிறர் பொருட்கண் ஆசையில்லாமை, இந்திரியங்களை யடக்கல் என்பனவாம்.

"பொய்கொலைகளவே காமம்பொருணசை – யிவ்வகைகளைந்துமடக் கியதியமம்" என்றதனுலு மறிக. நியமமாவது–தவம், சௌசம், [அஃதாவது மனத்தை ஸத்தியத்தினுலும் உடலை நீரினுலும், பரிசுத்தத்துவனுதமாக்கல்] லாராய்ச்சி, பெற்றது கொண்டுமகிழ்தல், தெய்வ வழிபாடு என்பனவாம்.

"பெற்றதற்குவத்தல்பிழம்புநனியுலர்த்தல்
கற்பனகற்றல்கழிகடுந்தூய்மை
பூசனைப்பெரும்பயமாசாற்களித்தலொடு
நயனுடைமரபினியமமைந்தே"

என்பதனுலு மறிக.

ஆசநமாவது–இருப்பாம். அது பத்திராசநம், பத்மாசநம், கேசரியாசநம், கோமுகாசநம், மயூராசநம், கூர்மாசநம், குக்குடாசநம், முதலிய பலவகைப்படும். முறையே சரீரத்தை இலை போலும், தாமரைபோலும், சிங்கம்போலும், பசுவின் முகம் போலும், மயிலைப்போலும், ஆமைபோலும், கோழிபோலும், அமைத்துக்கொண்டிருப்பதாம். இவ்வாசநங்களைத் தவிர சுகாசநமென்ப தொன்றுண்டு. அது எவ்விதமிருந்தால் சுகமும் திடமுமிருக்குமோ அவ்விதமிருத்தலாம். ப்ராணுயாமம் என்ற இது–ப்ராணவாயுவைத் தடுத்தலால் இப்பெயர் பெற்றது. இது மூன்று வகைப்படும். அவையாவன:—இரேசகம், பூரகம், கும்பகம் என்பனவாம். வாயுவை வெளியே விடுதலால் இரேசகமென்றும், வாயுவை உள்ளே பூரிப்பதால் பூரகமென்றும், ஜலம்நிறைந்த குடம் போல வாயுவை உள்ளே அடக்கி அசையாதிருத்தலால் கும்பகமெனவும், வழங்கப்படும். இரேசகவாயுவை மூக்கின் வலது துவாரத்தால் விடுவதும் பூரகவாயுவை மூக்கின் இடது துவாரத்தின் வழியாய் உள்ளுக் கிழுத்தலும், கும்பகவாயுவை உள்ளே அடக்குதலும் முறைகளாம்.

"உந்தியொடுபுணர்ந்த இருவகைவளியும்
தந்தமியக்கந்தடுப்பதுவளிநிலை"

என்றதனுலும் அறிக. இங்கே வளிநிலை யென்றது ப்ராணுயாமம். ப்ரத்யாஹாரமாவது–எல்லா இந்திரியங்களும் விஷயங்களிற் செல்லாவகை தடுத்து உள்நோக்கி யிருப்பதாம்.

"பொறியுணர்வெல்லாம்புலத்தின்வழாமல்
ஒருவழிப்படுப்பதுதொகைநிலைப்புறனே"

என்றதனுலுமறிக. இங்கே தொகைநிலையென்றது ப்ரத்யாஹாரமாம்

தாரணையாவது—எண்ணெயின் வீழ்ச்சிபோல இடைவிடாது அந்தக்கரணம் ஒருவழிப் பட்டிருப்பதாம்.

"மனத்தினையொருவழிநிறுப்பதுபொறையே"

என்றதனாலுமறிக. இங்குப் பொறை என்றது தாரணையாம்.

த்யானமாவது—மனந் தடுமாறவிடாமல் குறித்த பொருளிடத்திற் செலுத்துதலாம்.

"நிறுத்தியவம்மனம்நிலைதிரியாமற்
குறித்தபொருளொடுகொளுத்தல்நினைவே"

என்றதனாலுமறிக. இங்கே நினைவென்றது த்யானமாம்.

ஸமாதியாவது—இறைவன் வேறு, தான் வேறு என்ற நினைவில்லாமல் ஆநந்தமுற்றிருப்பதாம்.

"ஆங்கனங்குறித்தவம்முதற்பொருளொடு
தான்பிறனாகாத்தகையதுசமாதி"

என்றதனானுமறிக.

இவ் வஷ்டாங்கயோகத்தால் ஸர்வேசுவரனைத் தியானித்துப் பக்தி புரிபவர்;

"சிறுகாலையிலாநிலையோதிரியா
குறுகாநெடுகாகுணம்வேறுபடா
வுறுகால்கிளர்பூதமெலாமுகினும்
மறுகாநெறி........................"

என்றபடி கால வரையறை யில்லாமலும், நிலை மாறுதலில்லாமலும், வளர்தல், தேய்த லில்லாமலும், குணம் மாறுபடாமலும், ஊழிக் காலத்தில் எல்லா மழியினும், அழியாமலும் இருக்கின்ற பரம பதத்தை யடைந்து நித்யானந்த வாழ்வைப் பெறுவர்.

ப. — அ.

ஸ்ரீ:

பஞ்சீகரணோபாதாநத் திரவ்யம்.

பஞ்சீகரணமாவன பிருதிவீ [மண்] நீர், அக்கினி, காற்று, ஆகாசம், என்ற பஞ்சபூதங்கள் ஒன்றோடொன்று கலப்புற்றிருத்தலாம். இப் பூதங்கள் ஒன்றோடொன்று கலப்புற்றா லன்றிக் காரியப்படாவாதலான்; மண்ணையும், மணலையும், நீரையும் சேர்த்து ஒரு திரவ்யமாக்கிச் சுவரிடுவாரைப்போல ஸர்வேசுவரன் இப் பஞ்சபூதங்களை ஒன்றோடொன்றாகக் கலப்பித்து உவகை உண்டுபண்ணுகின்றான். இவற்றைக் கலப்பிக்கும்போது ஒவ்வொன்றையும் பாதி பாதியாகக் கூறிட்டு அப்பாதி பாதிக்கூறொவ்வொன்றையும், நன்னான்காகக் கூறிட்டுக் கலப்பிக்கின்றான். ஆகையால், ஒவ்வொரு பூதத்திலும் மற்றொரு பூதத்தின் கலப்பிருக்கின்றதென்றறிக.

பஞ்சீகரண விளக்கம்.

1		2		3		4		5	
பிருதிவீ	$\frac{1}{2}$	அப்பு(நீர்)	$\frac{1}{2}$	தேயு அக்கி	$\frac{1}{2}$	வாயு	$\frac{1}{2}$	ஆகாசம்	$\frac{1}{2}$
அப்பு	$\frac{1}{8}$	பிருதிவீ	$\frac{1}{8}$	பிருதிவீ	$\frac{1}{8}$	பிருதிவீ	$\frac{1}{8}$	பிருதிவீ	$\frac{1}{8}$
தேயு	$\frac{1}{8}$	தேயு	$\frac{1}{8}$	அப்பு	$\frac{1}{8}$	அப்பு	$\frac{1}{8}$	அப்பு	$\frac{1}{8}$
வாயு	$\frac{1}{8}$	வாயு	$\frac{1}{8}$	வாயு	$\frac{1}{8}$	தேயு	$\frac{1}{8}$	தேயு	$\frac{1}{8}$
ஆகாசம்	$\frac{1}{8}$	ஆகாசம்	$\frac{1}{8}$	ஆகாசம்	$\frac{1}{8}$	ஆகாசம்	$\frac{1}{8}$	வாயு	$\frac{1}{8}$
	1		1		1		1		1

இதனால் ஒவ்வொரு பூதமும் பிற பூதங்களின் கலப்பைப் பெற்றிருப்பதால், எல்லா பூதங்களும் எல்லா பூதங்களின் கலப்பைப் பெற்றிருக்கின்றமை காண்க.

உபாதான திரவ்யமாவது-காரியமாதற்கு யோக்கியமான வஸ்து என்றவாறு. அஃதாவது குடமாவதற்கு யோக்கியமான மண்பிண்டம் போலவும்; வஸ்திரமாவதற்கு யோக்கியமான நூல்போலவும்; இங்குப் பிருதிவீ, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், என்ற பஞ்சபூதமாவதற்கு யோக்கியமான அவ்வவ் பூதங்களின் பூர்வ நிலைமைகளாகிய ஸூக்ஷ்மாவஸ்தைகளாம்.

ப.— அ.

ஸ்ரீ:

உடலெடுத்ததின் பயன்.

சாஸ்திரம் தேகத்தோடுகூடிய ஆத்ம விஷயத்தைப்பற்றியும், தனி ஆத்ம விஷயத்தைப்பற்றியும், பேசுகின்றன. இவ்விரண்டனுள் தேகத்தோடுகூடிய ஆத்மவிஷயத்தைக் குறித்துப் பேசும் சாஸ்திரங்களே மிகுதியுமிருக்கின்றன. "எல்லாப் பிரமாணங்களிலும் தேகத்தாலே பேறென்கிறது" என்று பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த வாற்றாலும் அறியலாம். "சரீரமாத்யம் கலுதர்ம ஸாதகம்" என்றபடி தருமார்த்த காம மோக்ஷங்களாகிய நால்வகைப் புருஷார்த்தங்களை அடைவதற்கு சரீரமே முக்கிய சாதனமாயிருக்கும். இச் சரீரம் இருந்தாலன்றி சாஸ்திரங்களை ஆராய்ந்து நன்மை தீமைகளை அறிவதற்கும், பெரியோர்களை வழிபடுவதற்கும், தெய்வ பக்தி செய்வதற்கும், முடியாதாம். கருதிய பிரயோஜனங்களெல்லாம் சரீரத்தைக் கொண்டேதான் நடத்திக்கொள்ள வேண்டும்; ஆதலால் ஆத்மாவுக்குத் தேகம் இன்றியமையாத் துணையாயிருக்கின்றதென்பது விளங்கும்.

"வேதநூல்பிராயம்நூறுமனிதர்தாம்புகுவரேலும்
பாதியுமுறங்கிப்போகும்நின்றதிற்பதினையாண்டு
பேதைபாலகனதாகும்பிணிபசிமூப்புத்துன்பம்
ஆதலாற்பிறவிவேண்டேனரங்கமாநகருளானே"

என்றும் "பொல்லாவாக்கை" என்றும் சரீரத்தை வெறுத்தும், நிந்தித்தும், கூறியதற்குக் காரணம் யாதெனின் உணவு உண்பதற்கு முக்கிய சாதனமாகக் கொண்ட இலையானது உணவு உண்டபின் தொடுதற்கு யோக்கியமற்றதாய் ஒழிகிறதுபோல தேகத்தாலாகிய பிரயோஜனத்தைப் பெற்றபின் தேகம் விடுவதற்கு யோக்கியமாயிருக்கும். சரீரத்தாலாகிய பிரயோஜனத்தைப் பெற்றவர்கள் சரீரத்தை வெறுத்தும் நிந்தித்துங் கூறுவர். ஆதலால் சரீரம் நிந்தைக்கும் வெறுப்புக்குமே யோக்கியமானதென்று உணரலாகாது.

"புழுநெளிந்துபுண்ணழுகியோசனைநாறும்
கழிமுடைநாற்றத்தவேனும்—விழலர்
விளிவுன்னிவெய்துயிர்ப்பர்மெய்ப்பயன்கொண்டார்
சுளியார்சுமைபோடுதற்கு"

என்றபடி சரீரத்தாலாகிய பிரயோஜனத்தைப் பெற்றவர்கள் சரீரமாகிய சுமையை விடுதற்கு வெறுக்கமாட்டார். அங்ஙனம் சரீரத்தா

லாகிய பிரயோஜனத்தை அடையாதவர்கள் சரீரத்தை விடுவதற்கு வருந்துவரென்று கூறியதனுலு மறிக.

இனி இச்சரீரத்தோடு ஆத்மாவைப் பொருந்தும்படி செய்த ஸர்வேசுவரனுடைய விசித்ர காரியத்தை ஆராய்வோம்.

சரீரம் (1) அறிவற்றதாயும், [2] துன்பமுள்ளதாயும், (3) மாசுடையதாயும், (4) அநித்யமாயும், (5) மாறுதலுடைய தாயும், [6] ஸ்தூலமாயும், (7) பிராகிருதமாயும், (8) நித்திரை யுடையதாயும், (9) பொறுமையற்றதாயும், (10 அசுத்தமாயும், இருக்கும். [1] அறிவற்றதா யிருக்கையாவது—ஆத்மாவால் அறி யப்படுவதாய்க் கொண்டு தான் ஒன்றையும் அறியமாட்டாதா யிருக்கை [2] துன்பமுள்ளதா யிருக்கையாவது—பல துன்பங்களுக் கும் கொள்கலமாயிருக்கை. (3) மாசுடையதாவது—தன் உண்மை யான ஸ்வரூபம் தோன்றுமல் மறைபட்டிருக்கை. அஃதாவது பஞ்சபூத கார்யமான தன்னை பஞ்சபூத கார்யமென்று எளிதில் அறியப்படாதிருக்கை [4] அநித்யமாகையாவது "மின்னின்னிலை யில மன்னுயிராக்கைகள்" என்றபடி அழியுமியல்புடையதா யிருக்கை. (5) மாறுதலுடையதாவது—பால்யம், யௌவனம், முதலிய அவஸ்தை (நிலைமை)களால் வேறுபடுகை (6) ஸ்தூலமா யிருக்கையாவது—அவயவமுடையதா யிருக்கை (7) பிராகிருதமா யிருக்கையாவது—பிரகிருதி காரியமாயிருக்கை. (8) நித்திரையா யிருக்கையாவது புலன்களை யுணரமாட்டாதாயிருக்கை. (9) பொறுமையற்றதா யிருக்கையாவது-இடர்களைத் தாங்க மாட்டாதாயிருக்கை. (10) அசுத்தமா யிருக்கையாவது-பரிசுத்த மில்லாதிருக்கை.

ஆத்மா (1) ஜ்ஞானமயமாயும் (2) ஆநந்தமயமாயும் (3) நிர்மல மாயும் (4) நித்யமாயும் (5) ஏகரூபமாயும் (6) சூட்சுமமாயும் (7) ஸ்வயம்பிரகாசமாயும் (8 ஜாக்கிரதையாயும் (9 பொறுப்பதாயும் (10) பரிசுத்தமாயுமிருக்கும். (1) ஜ்ஞானமயமாயிருக்கையாவது— ஜ்ஞானகுணமுடையதாயிருக்கை (2) ஆநந்தமயமா யிருக்கை யாவது—சுகரூபமாயிருக்கை (3) நிர்மலமாயிருக்கையாவது—அழுக் கற்றதா யிருக்கை (4) நித்யமாயிருக்கையாவது—எக்காலத்தும் உளதாயிருக்கை (5) ஏகரூபமாயிருக்கையாவது—விகாரமற்றதா யிருக்கை (6) சூட்சுமமா யிருக்கையாவது—நிரவயவமா யிருக்கை

(7) ஸ்வயம் பிரகாசமாயிருக்கையாவது—தன்னைத்தானே விளக்கிக் கொண்டிருக்கை (8) ஜாக்கிரதையாயிருக்கையாவது—புலன்களை உணருவதாயிருக்கை (9) பொறுப்பதாயிருக்கையாவது-ஒன்றாலும் நலிவுபடாததாயிருக்கை (10) பரிசுத்தமாயிருக்கையாவது—தோஷமில்லாததாயிருக்கை. தொடரும்.

அநுதாபக் குறிப்பு.

வித்யாநிதி ஸ்ரீ. உ. வே. R. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள் M.A. இவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் ஜ்ஞாநாநுஷ்டான ஸம்பந்நராய் விளங்கியவர்; "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றபடி புகழுக்கேதுவாகிய பலகுணம் படைத்தவர்; ஆங்கில வித்யையிலும் தேர்ச்சியுற்று M. A., பட்டம்பெற்றவர்; வங்காளத்தில் நவத்தீபம் என்னுமிடத்தில் விளங்கும் ஸம்ஸ்க்ருத ஸர்வகலாசாலையின் நிர்வாஹகர்களான பண்டித மஹா சங்கத்தார் இவர் வித்யையின் அருமையும் பெருமையுங்கண்டு வியப்புற்று அவர்களால் வித்யாநிதி என்னும் பட்டப்பெயர் சூட்டப்பெற்றவர்; சென்னை ராஜதானி ஸம்ஸ்க்ருத பாடசாலைகளின் ஸூபரின்டெண்ட்டாக இருந்தகாலத்திற் பலவிடங்களிலும் ஸம்ஸ்க்ருத வித்யாசாலைகள் தோன்றும்படி உதவிபுரிந்தவர்; சுமார் 30 வருஷகாலமாக "ஸஹ்ருதயா" என்ற பத்திரிகைக்குப் பத்திராதிபஸ்தானம் வகித்து நடத்திவந்தவர்; "வாஸந்திகாஸ்வப்நம்" என்னும் நாடகம், ரகுவம்ச விமர்சம், மேகசந்தேச விமர்சம், கற்புநிலை, விவாஹ ரஹஸ்யம், முதலிய அரியபல ஆராய்ச்சி நூல்கள் இயற்றியவர்; இராமேசுவர தேவஸ்தான ஸம்ஸ்க்ருத மஹா பாடசாலையில் 6 வருஷ காலகாகத் தலைமையாசிரியராகவிருந்து அப் பாடசாலையை நன்னிலைமைக்குக் கொண்டுவந்தவர்; எல்லோருக்கும் நன்மை புரிவதிலே நோக்குடையவர்; வடதேசங்களிலுள்ள பலசங்கங்களிலும் அக்கிராஸனம் வகித்தவர்; இத்தகைய பெருந்தகையாளராகிய இந்த ஸ்வாமி, தெளிவிசும்பென்னுந் திருநாட்டி லெழுந்தருளியிருக்கிற நித்யஸூரிகளுக்கு நல் விருந்தாயினர். இவரால், பல நன்மைகளைப் பெறவிருந்த இந்நாடு இப்பொழுது இவரையிழந்தது குறையேயாம்.

ப. — அ.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

கூடல்மான்மியம்.

காப்பு.

நீருண்ட மேகத்தில் தோன்றுகிற இடிமுழக்கம் போன்ற ருத்ரனுடைய ரூபமும், மின்னலைப்போன்ற ப்ரஹ்மதேவனுடைய ரூபமும் ஆகிய இரண்டையும் ஒன்றிலே அடக்கி, அந்தக்காள மேகம்போலே திருவனந்தாழ்வான்மீது சாய்ந்தருளி யோகநித்திரை புரிகின்ற, நாராயணன் என்னுந் திருநாமத்தின் பொருளாயுள்ள ஸர்வேசுவரனுடைய திருவடிகளைப் பணிவோமாக.

சேனை நாயகர்.

வெண்மை நிறமான வளைந்த தந்தங்களையும், மதம் பொழிகின்ற யானையின் முகத்தையுமுடைய புண்ணிய ஸ்வரூபியாய், மிகுந்த க்ருபையோடுங் காவலை நடத்துகிற சேனைநாயகரை வணங்குவோமாக.

ஸ்ரீ மதுரவல்லித்தாயார்.

பூர்ண சந்திரனைப்போல் ப்ரகாசிக்கும் திருமுகமண்டலமும், கோவைக்கனிபோலுந் திருவதரங்களும், பக்தர்கள் அன்போடு ஸ்தோத்ரம் செய்கிற அழகிய குழையணிந்த காதுகளும், கருமேகம்போன்ற கூந்தற்காடும், மானினுடைய கண்போலுள்ள இரண்டு திருநயனங்களும், தன்னுடைய நாயகன் உகந்து வர்த்திக்கிற திருமலைபோலே விளங்குகிற ஸ்தனங்களும், துடிபோலும் இடையும், பத்மம்போன்ற கைகளும், ஆசிரிதர்களுடைய கதியே குடிகொண்டு விளங்குவதுபோன்ற ஸ்ரீமதுரவல்லித்தாயாருடைய திருவடிகளையும் த்யானிப்போமாக.

ஸ்ரீ கூடலழகர்.

மஹாமேரு பர்வதத்தை வில்லாகக் கொண்ட சிவபிரானுக்குத் திருமணம் செய்வித்தற் பொருட்டு அஷ்டாங்க விமானத்தில் திருக்கோயில்கொண்டு, பிர்ம்மா, சனகர், காசிபர், பிருகு, அம்பரீடன் என்னு மிவர்களும், பூர்வத்தில் மதுரையிலே அரசாட்சி

செய்த புரூரவஸ், மலையத்வஜன் முதலானவர்களும் தொழுது வணங்கவும், ஸ்ரீ விஷ்ணுசித்தர் பல்லாண்டு பாடவும், இங்குவந்து எழுந்தருளி யிருக்கிற மல்லாண்ட தோளருடைய பாதங்களில் பணிவோமாக.

அவையடக்கம்.

ஸ்ரீவிஷ்ணு சித்தருடையதிருப்பல்லாண்டின்அர்த்தவிசேஷங்களைக்கேட்டு அனுபவித்திருக்கிற ஸ்ரீ கூடலழகப்பெருமாளுடைய திருச்செவிகளுக்கு நிரம்ப இன்பம் விளையுமாறு நாம் இம்மான்மியத்தைப் பேச வல்லேமல்லோம். ஆனாலும் அபார கருணாம்ருத சாகரரான அப்பெருமாள் சக்ரவர்த்திதிருமகனாராகத் தோன்றின காலத்தில், பேதையான சபரிசெய்த உபசாரத்தையும் அணிற்பிள்ளையின் கைங்கர்யத்தையும் போர உகந்துகொண்டாரகையால் இதையும் அவர் அங்கீகரித்தருளுவரோ அன்றோ என்று சங்கிக்கவேண்டுவதில்லை.

வரலாறு.

அநாதிஸித்தமான வேதங்களின் அர்த்தத்தை ப்ரதிபாதிக்கின்ற உபப்ரம்ஹணங்கள் பலவகையாக உள்ளன. அவற்றில் புராணவகையில் ப்ரஹ்மாண்ட புராணம் என்பது ஒன்று. அந்த ப்ரஹ்மாண்ட புராணத்தில் க்ஷேத்திரங்களின் மஹாத்ம்யத்தை வெளியிடுவதான காண்டம் ஒன்றுண்டு. அது எம்பெருமான் அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருக்கிற பல திவ்யதேசங்களினுடைய மான்மியத்தையும் விரிவாய்ச் சொல்லுகிறது. அந்த க்ஷேத்ர மாஹாத்ம்ய காண்டத்தில் எண்பத்திரண்டாவது அத்யாய முதலாகத் தொடங்கி, தொண்ணூற்றுமூன்றுவது முடியப் பனிரண்டு அத்யாயங்கள் 'கூடல்' என்னும் பே... பற்றமதுராபுரியின் மாண்புகளை விளங்கவுரைக்கின்றன.

பூர்வத்தில் ஸ்ரீமந் நாராயணன் அவற்றை நான்முகனுக்குத் திருவாய்மலர்ந்தருளினான். நான்முகன், தேவர்களும் முனிவர்களும் தன்னைச்சூழ்ந்து போற்ற, நாரதபகவானுக்கருளிச் செய்தான். பின்னுளில் அந்த நாரத முனிவரும் அவற்றை வேதவியாசருக்கு வெளியிட்டருளினார்.

ஸ்ரீய:பதியான ஸர்வேசுவரனுடைய த்வாதசநாமங்களின் சங்க்யை யுடையனவா யிருக்கின்ற இப்பன்னிரண்டு அத்யாயங்களை முழுவதுமாயினும், அவற்றிற் பாதியான ஆறத்தியாயங்களையாயினும், அவற்றிற் பாதியான மூன்றத்தியாயங்களையாயினும், அல்லது சில கிரந்தங்களையேனும் யார் மிகுந்த ஆதரத்தோடு சொல்லுகிறார்களோ அல்லது கேட்கிறார்களோ அவர்களே அந்த நாராயணனுடைய ப்ரீதிக்குப் பாத்ரராய் நற்கதி பெறுவார்கள்.

வையை நதி.

எதனுடைய மான்மியத்தைப் பேசப்புகுந்தோமோ அந்தக் கூடல் என்னும் நகரம் தெக்ஷிணதேசத்தில் பாண்டியநாட்டில் உள்ளது. அப்பாண்டியநாடு வையைநதியின் வளத்தால் சிறப்புற்று விளங்குவது. எல்லாவிதத்திலும் தனக்கு இணையற்றதான அவ் வையை அதிவேகமாக ப்ரவஹிக்கும் இயல்புடையதாகையால் வேகவதி என்றும், மாலைபோலிருத்தலால் கிருதமாலை என்றும் பெயர் கூறப்படுகிறது.

தாமரை மலரில் வீற்றிருக்கும் ப்ரஹ்மதேவன் ஒருகாலாந்தரத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளை விளக்கியதனு லுண்டான அந்தநதி பரமபாவனமான தீர்த்தத்தையுடையது. அன்றியும் அது பொதியமலையைத் தனக்கு வாஸஸ்தானமாக வுடைய அகஸ்திய முனிவரால் தமது கரகத்தில் நிறைத்து வைத்துக்கொள்ளப்பட்ட பெருமை வாய்ந்ததாகவும் சொல்லப்படுகிறது.

முன்னொருழியில் சத்யவிரதன் என்னும் பாண்டியராஜன் இந்த வையை நதியில் தர்ப்பணஞ் செய்தான். அப்போது மஹாவிஷ்ணு அவன் கையில் ஒரு மத்ஸ்யமாகத் தோன்றினர். அவ்வாறு தோற்றஞ்செய்த அவர், அக்காலத்து இறந்தனவாகிய வேதங்களை யெல்லாம் மீண்டும் அளித்து அந்த சத்யவிரதனுக்கு ஏழாவது மனுபதத்தையுங் கொடுத்தார். அதனாலேயே பாண்டியர் குலத்திலுள்ளாரெல்லாரும் மீனகேதனத்தைத் தமக்கு ஓர் அங்கமாகக் கொண்டார்கள். அந்த வம்ஸத்தி லுற்பவித்தவளான அழகு வாய்ந்த அம்பிகைக்கு மீனாக்ஷியென்று பெயர் சூட்டப்பட்டதற்கும் அதுவே காரணமாகும். இத்தகைய ப்ரபாவத்தோடு கூடிய அந்த மஹாநதியின் மாண்புகளனைத்தும் மூதறிவுடைய முனிவர்களாலன்றி ஏனையோரால் இயம்புந் தரத்தினவல்ல.

பாண்டியனாடு.

இது நிற்க, கிருதமாலா நதியே பெற்றதாயாகவும் வைகை நதியே வளர்ப்புத்தாயாகவும் அமையப்பெற்று மிகுந்த சுபிக்ஷத்தையுடையதாயுள்ள பாண்டியநாடு எல்லாச் செல்வத்தாலும் ஒப்புயர்வற்று விளங்குகிறது. நீர்வளத்தாலும் நிலவளத்தாலும் நிறைந்த செந்நெற் கழனிகள்தோறும் உரிய காலத்திற் பக்குவமாய்ப் பாதுகாக்கப்பட்ட பயிர்களெல்லாம், அந்ததேசத்தில் பாத்திர மறிந்து தர்மம் செய்தவர்களுடைய குலம் தழைப்பதுபோலச் செழித்தோங்கி வளர்கின்றன. அவ்வாறு வளர்ந்த பயிர்கள் பின், உலகிலுள்ள வறுமையாகிய மத்தகஜத்தை அடக்குவதற்குஒவ்வொன்றே போதுமானதென்று சொல்லுமாறு, பல அங்குசங்களைப் போலக் கதிர்க்குலை சாய்கின்றன. பூமி முழுவதும் ஒன்று நூறாக விளைவதனால் அந்த நாடு தன்னிடத்தில் வாழ்பவர்களுக்கு எக்காலத்தும் இன்பத்தையே கொடுக்கிறது.

> "பொன்னனார்போகமென்னப்புலனெலாம்போகமோங்கும்
> தென்னனாட்டணியின்சீர்மைதேவர்நாட்டிடத்துமுண்டோ
> அன்னநாட்டிறைவன்வானத்தமரர்வேந்தனையுநீர்க்கோன்
> தன்னையும்புறங்கண்டேழுமழையையுந்தளையிட்டானே".

என்றபடி அந்த நாட்டிலுள்ளாரனுபவிக்கும் அனுபவமெல்லாம் தேவலோகத்திலும் அரியனவென்றே சொல்லலாம். ஒருகாலத்தில் அந்நாடாளும் அரசனான பாண்டியன் தேவேந்திரனையும் வருணனையும் போரிலே புறங்கண்டு சப்தமேகங்களையுந் தளையிட்டானென்றால் அவனுடைய நாட்டில் வளத்திற்கும் அனுபவங்களுக்கும் என்ன குறைவுண்டு?

அந்த தேசத்திலுள்ளார் தமது விளைபொருள்களில் ஆறிலொன்றரசனுக்களித்து மீந்ததை தேவாலயங்களுக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் பிதிர்க்களுக்கும் வித்வான்களுக்கும் பங்கிடுகிறார்கள். தானம், மானியம், மடப்புறம், சத்திரம், சாலை முதலான நல்ல வழிகளிலும் வேண்டிய அளவு செலவிட்டு எஞ்சியதையே அவர்கள் தங்களுக்குரியதாக ஆக்கிக் கொள்ளுவார்கள். அவ்வாறு தமது பங்காகவுள்ளவற்றையும், அவர்கள் உண்ணுவதற்குமுன் வைசுவதேவம் செய்தும் ஞானிகளுக் களித்தும் பிறகு தாமுட்கொள்வது வழக்கமாயிருக்கிறது.

அங்குள்ளாரனைவரும் த்ரிகரணங்களாலும் தர்மம் செய்வதிலேயே நோக்கமுடையவர்கள். அவர்கள் சரீரத்தினால் மிகவும் வருந்திச் செய்வனவெல்லாம் பிறர்களுக்கு ஹிதமாவனவே யாகும். தமது வாயினாற் சொல்லுஞ் சொற்கள் அவர்கள் செய்கைகளைக் காட்டிலும் பதின்மடங்கு இனிமையுடையனவா யிருக்கும். அப்போது அவர்களுடைய உள்ளமும் அதனினும் பன்மடங்கு உவகையுடையதாயிருக்கிறது. அப்படி தர்மம் செய்வதிலும் அவர்கள் தமக்கென்று ஒரு விதமான ப்ரயோஜனத்தையும் கருதுவதில்லை.

இவ்வாறு தர்மார்த்த காமமோக்ஷங்களாகிற சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைவதையே அவர்கள் கருத்தாகக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் அதர்மமென்பது அந்த நாட்டினின்று குடிபோயிற்று. தாம் பெற்றதையே பெரிதாக மதிக்கும் பேரறிவாளராகையால் அந்நாட்டார் துறவிகளைப்போல் விளங்குகிறார்கள். அதனால் அவர்கள் எக்காலத்தும் துன்பத்திற்காளாவதில்லை.

அன்றியும் அந்ததேசத்தில் ஒருவருக்கொருவர் விரோதமென்பது காணமுடியாது. நீலமணிபோலுந் திருநிறத்தைக் கொண்ட மாயவனுடைய ஸ்தானத்தின் மாஹாத்ம்யத்தாலே பக்ஷிராஜனான கருடனும் ஸர்ப்பராஜனான ஆதிசேஷனும் தமது பகைமையை ஒழித்து உறவாடுதல்போல அவ்விடத்தில் புலிப்போத்தும் புல்வாயும் ஒருதுறையிலே ஒக்க நீரருந்துவனவாக வுள்ளன.

உலகமுழுவதும் ஒருகுடைக் கீழாண்ட புரூரவஸ் என்னும் அரசனும் இந்நாட்டிலிருந்துகொண்டே ராஜ்யபாரத்தை வஹித்துவந்தான். அகஸ்திய முனிவரும் தென்னாடு மிகவும் அதிசயமுடையதென் றெண்ணியே அத் தேசத்தில் நித்யவாஸம் செய்வாராயினர்.

மதுரைமாநகரம்.

இத்தகைய விசேஷங்களோடு கூடிய தெக்ஷிணதேசத்துக்கு நடுநாயகமாய் விளங்குவது 'கூடல்' என்னும் மதுரைமாநகரமாகும். அது ஸ்ரீ கூடலழகப்பெருமாள் உகந்தருளின திவ்யதேசமாக வுள்ளது. அதனால் அது ஸ்ரீய:பதியான ஸர்வேசுவரன் விரும்பி உறையும் பரமபதமும், பாற்கடலும், கருடவாஹனமும், சர்ப்பசயனமுமாகிய இவற்றோடு ஒப்பிட்டுச் சொல்லும் உயர்வுடையதாகின்றது —

"போகபூமியையுவணையைப்பொங்குபாற்கடலை
நாகபாயலைப்பேர்ல்வதுகூடல்மாநகரம்".

அவ்வூர் கோட்டை மதில்களாலும் அகழியினுலும் சூழப்பட்டுப் பல கோபுரங்களை யுடையதாய் அழகுபெற அமைந்துள்ளது. எக்காலத்தும் இடையீடில்லாத திருவிழாவையுடைய வீதிகள்தோறும் ஆகாசத்தை அளாவிய மாடமாளிகைகள் நிறைந்துள்ளன. ப்ராஹ்மணர்களுக்கும் க்ஷத்ரியர்களுக்கும் வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்கும் ப்ரத்யேகமாக வெவ்வேறு வீதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அந் நகரத்தின் ஒருசார் சிறுவர்கள் விளையாடுமிடங்களும், ஒருசார் வீரர்கள் ஆயுதம் பயிலுமிடங்களும், ஒருசார் ஸ்திரீ புமான்கள் சிருங்காரமாகப் பொழுதுபோக்கு மிடங்களும் மற்ருெருசார் இலக்கண இலக்கியங் கற்போரிடங்களுமாகக் காணப்படுகின்றன. இன்னும் அது சோதிடம், சிற்பம், கணிதம், சங்கீதம் முதலிய எல்லாக் கலைகளுக்கும் இருப்பிடமாகும் பெருமையுடையது.

அவ்வூரில் வாழும் மாந்தர்களனைவரும் எம்பெருமான்பக்கல் பக்திசெலுத்துவதில் இணையற்றவர்களாயிருக்கிருர்கள். அழகினுலும், செல்வத்தாலும், கல்வி கேள்விகளினுலும் குறைவில்லாதவர்களாகிய அவர்கள் ப்ரஹ்மசரியம், க்ரஹஸ்தம், வானப்ரஸ்தம், ஸந்நியாஸம் என்னும் நான்குவகைப்பட்ட ஆச்ரமங்களினும் நின்று தங்கள் தங்களுக்கு விதித்த ஒழுக்கத்தில் வழுவாத உத்தமமான பாகவதர்களாயிருக்கிருர்கள். ஸ்திரீகளெல்லாம் மிகுந்த கற்புடையவர்களாய்த் தங்களுடைய பர்த்தாக்களுக்கு வேண்டிய சுச்ரூஷை செய்வதே காரியமாகக் கருதுகிருர்கள். ப்ராஹ்மணர்கள் ஓதும் வேதத்தின் ஒலி எல்லா விடங்களிலும் நிறைந்திருக்கின்றது. அவர்கள் செய்யும் வேள்விகளில் எழும் ஹோமாக்னியின் புகை ஆகாசமுழுவதும் வ்யாபிக்கின்றது ஆதலால் அவ்விடத்தில் வர்ஷாகாலந் தவருமல் நாடுமலிய மழைபெய்கிறது. இவ்வாறு எல்லாவிதத்திலும் சிறப்புற்று விளங்கும் மதுரைமா நகரத்தின் தன்மைகள் யாவும் முற்றச்சொல்லி முடியாதனவாகும். இது நிற்க,

---

நைமிசாரண்யம்.

நைமிசாரண்யமென்னும் க்ஷேத்ரம் நிறைந்த கேள்வியை யுடைய ஞானிகளுக்கு வாஸஸ்தானமாகும் தகுதியுடையது. மூவுலகத்திலும் கிடைத்தற்கரிய பேறுகளைத்தருவதும், வித்யை களுக்கெல்லாம் உறைவிடமாயுள்ளதும், யாகங்கள் புரிவதற்கு மிகுந்த யோக்யமானதும், தவமுந் தானமுங் குடிகொண்டிருப் பதும், த்ரிமூர்த்திகளுக்கும் விருப்பத்தைச் செய்வதும் அந்த திவ்ய தேசமேயாகும்.

அங்குள்ளாரனைவரும் மூன்றுகாலங்களிலும் ஸ்நானம் செய் பவர்கள்; அஷ்டாக்ஷர மந்த்ரத்தை உச்சரித்து அர்க்யம் கொடுப் பவர்கள்; த்வாதச ஊர்த்துவ புண்டரங்களைத் தரித்துக்கொள்ளு பவர்கள்; பாகவதகைங்கர்யத்தில் மிகவும் ஈடுபட்டவர்கள்; வறுமை யும் செல்வமும், குளிரும் நெருப்பும் ஆகியவற்றையெல்லாம் ஒரே தன்மையாகக் கருதும் இயல்புடையவர்கள்.

அன்றியும் அவர்கள் இந்திரிய நிக்ரஹம் செய்தவர்கள்; காம முதலான குற்றங்களை அடியோடு தொலைக்க த்ரிதண்டத்தைக் கைக்கொண்டவர்கள். பசிக்கனலை அவிக்கக் கமண்டத்திலே நீரேற் றுக் கொள்ளுபவர்கள்; அஷ்டாங்க யோகசித்தி யுடையவர்கள்; தபோமஹிமையால் ஸமஸ்த பாபங்களையும் போக்கினவர்கள்; த்ரி கரணசுத்தியுடையவர்கள்; எப்பொழுதும் ஸ்ரீமந் நாராயணனுடைய சரணாரவிந்தங்களையே த்யானிப்பவர்கள்; பக்திபாரவஸ்யத்தால் ஆனந்தபாஷ்பம் சொரிய மயிர்க்கூச்செறிந்து பகவத் குணானுபவம் பண்ணுவதே காலக்ஷேபமாகக்கொண்டு மோக்ஷ சாம்ராஜ்யத்தைத் தேடும் வல்லமையுள்ளவர்கள்.

இத்தகைய தபோதனர்கள் அகலாது வதியும் அந்த மஹா ரண்யம் தேவதைகளுடைய சாந்நித்யம் பெற்று விளங்குகிறது. முனிவர்கள் இடையறாது முழங்கும் வேதங்களின் ஒலியோடு அங் குள்ள கிளிகள் பழகுவதனால் அவைகளும் வேதம் ஓதுகின்றன. எங்குபார்த்தாலும் யாககுண்டங்கள் தோன்றுகிற அவ்வனத்தில் ஹோமாக்னியின் புகை எல்லாவிடங்களிலும் வ்யாபித்து மேக படலங்களைப்போல் தோன்றுகிறது.

அம் முனிவராச்சிரமங்களுக்கு அதிதிகளாய் வருவோர் காம தேனுவினால் சத்கரிக்கப்படுகிறார்கள். அவ்விடத்தில் விளையாடும் பருவமுள்ள சிறுபிள்ளைகளுங்கூடக் கையிலே தருப்பையும் வாயிலே மந்திரோச்சாரணமுமாகத் தங்கள் சக்தி விசேஷத்தால் விரோதிகளை அழிக்கும் தன்மைவாய்ந்து விளங்குகிறார்கள். அந்த ரிஷிகளின் பத்னிகள் தங்கள் பாதிவ்ருத்தியத்தின் மஹிமையால் ஜலத்தையுங்கூடக் குடத்தினால் முகந்துகொள்ளாமல் கையினாலேயே திரட்டிஎடுக்கும் திறமையுடையவர்களாயுள்ளார்கள்.

வியாசரை முனிவர்கள் வினவுதல்.

இத்தன்மைத்தான அந்த நைமிசாரண்யத்தில் சரஸ்வதி நதி தீரத்தில் தவம்புரிந்தவர்களாகிய சௌனகர் முதலான ரிஷிஸ்ரேஷ்டர்கள் எல்லோரும் சேர்ந்து பரமபதத்தை யடையும் விருப்பமுடையவர்களாய்ப் பஞ்சஸம்ஸ்காராதி வ்ரத நியமங்களோடுகூடிய தீக்ஷையை மேற்கொண்டு தீர்க்கசத்திர யாகஞ்செய்தார்கள்.

அவ்வாறு யாகம் செய்தபொழுது அவர்கள் மஹாத்மாவான வேதவ்யாஸமுனிவரை சாஸ்த்ரோக்தமான முறையில் வழிபட்டு, "பிறப்பும்இறப்பும் இல்லாதவனும், தனக்கு ஒப்புயர்வில்லாதவனுமான ஸ்ரீமந் நாராயணனுடைய அம்சமாய், உலகமுய்யும்பொருட்டு, பராசரமுனிவருக்கு சத்யவதியின் கற்பத்தில் தோன்றினவரே! ஸகலர்க்கும் ஹிதத்தையே நாடுபவரே! ரிஷிஸ்ரேஷ்டரே! குணக்கடலா யுள்ளவரே! ஸர்வஜ்ஞரே! ஸத்யஸந்தரே! தன்னுயிர்போல மன்னுயிரையும் மதிக்கும் கருணைக்கடலானவரே! நான்குவேதங்களிலும் தர்ம சாஸ்த்ரங்களிலும் வல்லவரே! தேவரீராலேயே நாங்கள் மோக்ஷ புருஷார்த்தத்தை யடையும் ஸகலமான வழிகளின் ப்ரயோஜனத்தையும் சொல்லக்கேட்டு க்ருதார்த்தரானோம்.

" அன்றியும், காவேரி நதிக்குத் தென் பார்சுவத்தில் ஏழு யோஜனை தூரத்தில் ஸப்த லோகங்களிலும்உள்ளவர்களால் துதிக்கப் படுகிற ருஷபாசலமென்று ஒரு விசாலமான மலைஇருக்கிறது. அது, புராணங்களாலும் இதிஹாசங்களாலும்போற்றப்படுவனவாய் தன்கண் வாழ்வார்க்கு போக மோக்ஷங்களைக்கொடுக்கும் புண்ணிய பூமிகள் பலவற்றுள்ளும் சிறந்தது. அந்த ஸ்தலத்தில் செங்கமல

65

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ||

ஸ்ரீராமாநுஜஸித்தாந்தப்ரகாசிகை.

(1) [illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

(2) [illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

(3) [illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

(4) [illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

(5 [illegible] | [illegible] || [illegible] | [illegible] ||

தமிழ்ச்சங்கம் பவர்ப்பிரஸ், மதுரை.–'24.